
விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 088 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 03 திங்கட்கிழமை (17.03.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

# பட்டலந்த வதை முகாம் விசாரணை
# நான் நிரபராதி - ரணில் அறிக்கை



(கொழும்பு)

பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கையில் ஜே.வி.பி தொடர்பாக குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த ஏனைய அனைத்தையும் நான் நிராகரிக்கிறேன் என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பட்டலந்த வதை முகாம் தொடர்பில், சர்வதேச தொலைக் காட்சியான அல் - ஜசீரா அண்மையில் ரணில் விக்கிரமசிங்கவிடம் கேள்வி எழுப்பியதையடுத்து, குறித்த விவகாரம் பேசுபடுபொருளாகியது.

இதற்கும் மேலாக, பட்டலந்த விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை அண்மையில் பாராளுமன்றத்திலும் வாசிக்கப்பட்டது.

இந்நிலையில் இதுகுறித்து

02ஆம் பக்கம் பார்க்க

## உள்ளூராட்சித் தேர்தல் வேட்புமனுக்கள் இன்று முதல் ஏற்பு

(கொழும்பு)

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்று 17ஆம் திகதி

15ஆம் பக்கம் பார்க்க

## சாதாரண தரப் பரீட்சை விசேட அறிவிப்பு

(கொழும்பு)

2024ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைகள் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில், பரீட்சைகள் தொடர்பில் ஏதேனும்

15ஆம் பக்கம் பார்க்க

## மலேரியா நோயாளி யாழில் அடையாளம்

03ஆம் பக்கம் பார்க்க

## பட்டலந்த அறிக்கை ஏப்ரல் 10இல் விவாதம்

05ஆம் பக்கம் பார்க்க

### வாழ்த்துகின்றோம்



இன்று ஆரம்பமாகும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள், பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகின்றோம்.

கல்விப் பிரிவு
வலம்புரி

# ரணிலின் கதை இங்கு எடுபடாது
# அவர் மீது சட்ட நடவடிக்கை
## அடித்துக் கூறுகிறார் அமைச்சர் நளிந்த



(கொழும்பு)

பட்டலந்த ஆணைக்குழுவின் அறிக்கை தொடர்பில் உரையாற்றுவதற்கு, முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மிகவும் காலம் தாழ்த்திவிட்டார்.

என்ன நடந்தாலும் பட்டலந்த வதை முகாம் அறிக்கை தொடர்பில் சட்ட நடவடிக்கை நிச்சயம் எடுக்கப்படும் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

(15ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே...!
அன்பு ஜவஹர்ஷா எழுதிய
சிறப்புக் கட்டுரை
(ஆ-ர்)

## 13ஆவது திருத்தச் சட்டமே தமிழ் மக்களுக்கான தீர்வு
### இதில் இந்தியா உறுதி



(கொழும்பு)

13ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாட்டில் எதுவித மாற்றமும் இல்லை என இந்தியாவின் ஐ.நாவுக்கான பிரதிநிதி அரிண்டம் பாக்ஜீ தெரிவித்துள்ளார்.

15ஆம் பக்கம் பார்க்க

## பாதாள உலகக் குழுக்களை அடக்கத் திணறுகிறது அரசு
### சம்பிக்க ரணவக்க காட்டம்



(கண்டி)

பொலிஸ் சேவை உட்பட பாதுகாப்புச் சேவை அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளதால் நாட்டில் சட்டம் என்று எதுவும் கிடையாது எனப் பாதாள

02ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு

**அன்பு வாசகர்களே!**

**உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரது உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.**

தொடர்புகளுக்கு :

தொலைபேசி:

**076 097 3127**


**021 221 7603**

**/ - 076 636 3378**

E.mail: Valampurii@yahoo.com


# மரண அறிவித்தல்

தோற்றம்
10 - 02 - 1965



மறைவு
15 - 03 - 2025

## மகேசன் மாதவன்
(பொறியியலாளர்)

உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் யாழ். வண்ணை பெருமாள் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட மகேசன் மாதவன் அவர்கள் (15.03.2025) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மகேசன் - விஜயதேவி(கனடா) தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தவச்செல்வம்(வேலணை) - புஸ்பகாந்தி தம்பதியினரின் அன்பு மருமகனும் விஜிதாவின் அன்புக் கணவரும் றோகிற், சஞ்சய், றாகவ் ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr.ஜானகி(அமெரிக்கா), பகீரதன்(BEEFORT International School), குமுதினி(கனடா), மைதிலி(கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் Dr.சத்தியசீலன்(அமெரிக்கா), றவிகலா, ஸ்ரீரங்கநாதன்(கனடா), ஜெயநேசன்(கனடா), வினோதா(உப அதிபர் - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), சிற்பரன்(Architect), செந்தூரன்(MSA3 - Building Construction), தயானா(சட்டத்தரணி) ஆகியோரின் அன்பு மைத்துனரும் விஜயசுந்தரம்(பிரதம ஆசிரியர் - வலம்புரி), சுகந்தி, மயூரதி, மதிதரன்(Managing Director - PETFORM Groups) ஆகியோரின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை 18.03.2025 செவ்வாய்க்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் உரும்பிராயிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிற்பகல் 1.00 மணியளவில் உரும்பிராய் வேம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வேம்பன் ஒழுங்கை
(ஒஸ்கா லேன்), உரும்பிராய். (C-2478)

தகவல்: குடும்பத்தினர்
077 726 2966

## பட்டலந்த வதை...

நேற்று நாட்டு மக்களுக்கு விசேட உரையாற்றிய ரணில் விக்கிரமசிங்க, விசேட அறிக்கை ஒன்றையும் வெளியிட்டிருந்தார்.

அவர் வெளியிட்ட அறிக்கை வருமாறு, 1987 ஆம் ஆண்டு இந்திய - இலங்கை ஒப்பந்தம் கையெழுத்தான பிறகு, ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) நாடு முழுவதும் பயங்கரவாதத்தை விதைக்க நடவடிக்கை எடுத்தது. அந்த நேரத்தில், ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன நாட்டின் முக்கியமான இடங்களைப் பாதுகாக்கும் அதிகாரத்தை அமைச்சரவை அமைச்சர்களிடம் ஒப்படைத்தார். பியகம பகுதியில் எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம், டீசல் மின் உற்பத்தி நிலையம், மகாவலியிலிருந்து கொழும்புக்கு மின்சாரம் வழங்கும் மையம் மற்றும் வர்த்தக மண்டலம் போன்ற பல பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த இடங்கள் இருந்தன.

அந்தப் பகுதியைப் பாதுகாக்கத் துருப்புக்கள் வரவழைக்கப்பட்டன. பாதுகாப்புப் படையினர் தங்குவதற்காக இலங்கை உர உற்பத்திக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான கைவிடப்பட்ட கட்டிடங்கள் மற்றும் வீடுகளை வழங்க முடிவு செய்யப்பட்டது. அந்த நேரத்தில், இலங்கை மின்சாரசபை அதிகாரிகள் ஏற்கனவே அங்கு பல வீடுகளில் வசித்து வந்தனர். இந்தக்கால கட்டத்தில், சபுகஸ்கந்த பொலிஸ் நிலையம் தாக்கப்பட்டு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொல்லப்பட்டார். அந்த நேரத்தில் பாதுகாப்புப் பிரதிஅமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன என்னை அழைத்து, வீட்டு வளாகத்தில் உள்ள வீடுகளை இராணுவம் மற்றும் பொலிஸாருக்கு வழங்குமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி அப்போதைய பொறுப்பாளர் சம்பந்தப்பட்ட வீடுகளை களனி பொலிஸ் கண்காணிப்பாளர் நலின் தெல்கொடவிடம் மாற்ற நடவடிக்கை எடுத்தார்.

இதற்கிடையில் மாகாண சபை உறுப்பினர் ஒருவர், கூட்டுறவு சங்கத் தலைவர் ஒருவர் மற்றும் ஒரு பொலிஸ் சார்ஜன்ட் உட்பட பலர் படுகொலை செய்யப்பட்டனர். அதனுடன் மற்றொரு மாகாண சபை உறுப்பினரின் வீடும் தாக்கப்பட்டது. வீழ்ச்சியடைந்த வாழ்க்கையையும் பொருளாதாரத்தையும் மீட்டெடுக்கவும் நாட்டில் அமைதி மற்றும் தேசிய பாதுகாப்பை உறுதி செய்யவும் அதிகாரத்தில் இருந்த அரசு நடவடிக்கை எடுத்தது.

1994 ஆம் ஆண்டுக்குப் பிறகு பட்டலந்தப் பகுதியில் சித்திரவதைக்கூடம் இருந்ததா என்பதை விசாரிக்க சந்திரிகா குமாரதுங்க ஒரு ஆணையத்தை அமைத்தார். அதற்குப் பலர் அழைக்கப்பட்டிருந்தனர். நானும் சாட்சியாக அழைக்கப்பட்டேன். அந்த நேரத்தில் நான் நாட்டின் எதிர்க்கட்சித் தலைவராகப் பணியாற்றிக் கொண்டிருந்தேன்.

முழுமையான அரசியல் அவதூறு பிரசாரத்தை நோக்கமாகக் கொண்டு பட்டலந்த ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. ஆனால் அந்த முயற்சி வெற்றி பெறவில்லை. அறிக்கையின் முடிவுகளில் ஒரு அமைச்சராக, பொலிஸ் கண்காணிப்பாளர் மூலம் பொலிஸாருக்கு வீட்டு வசதி வழங்குவது சரியாக இல்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. வீடுகளை ஐ.ஜி.பியிடம் ஒப்படைத்து அவர் மூலம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் ஒப்படைப்பதே சரியான முறையாக இருக்க வேண்டும். இந்தச் செயலுக்கு நளின் டெல்கோடாவும் நானும் மறைமுகமாகப் பொறுப்பு என்று ஆணைய அறிக்கை கூறுகின்றது. ஆணைக்குழு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றைய விடயங்கள் எதுவும் எனக்குப் பொருந்தாது. 1988 ஆம் ஆண்டு காலகட்டத்தில் ஜே.வி.பி. மேற்கொண்ட ஏராளமான பயங்கரவாதச் செயல்கள் தொடர்பான முடிவுகள் மற்றும் அவதானிப்புகள் ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளன. பின்னணியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆணைக்குழு அறிக்கையின் மூன்றாவது அத்தியாயம் ஜே.வி.பி. செய்த கொடூரமான பயங்கரவாதச் செயல்களை விரிவாக விவரிக்கிறது. முழு வரலாறும் அதில் சேர்க்கப்பட்டுள்ளது.

மேற்கூறியவற்றைத் தவிர வேறு எந்தக் குற்றச்சாட்டுகளும் எனக்குப் பொருந்தாது. அந்த அறிக்கையை நான் முழுமையாக நிராகரிக்கிறேன். பட்டலந்த ஆணைக்குழு அறிக்கையை மறைத்ததாக யாரும் குற்றம் சாட்ட முடியாது. இது 2000 ஆம் ஆண்டில் பாராளுமன்ற அமர்வில் அறிக்கையாக இருந்தது. ஆனால் இந்த விடயத்தில் யாரும் விவாதம் கோரவில்லை. குறைந்தபட்சம் ஜே.வி.பி. அப்படி ஒரு கோரிக்கையை வைக்கவில்லை.

பலர் அந்த அறிக்கையை ஏற்கவில்லை. எனவே பாராளுமன்றத்தில் அதைப்பற்றி விவாதிக்க எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று நாம் நம்பலாம். இதுவரை ஆட்சிக்கு வந்த எந்த அரசியல் கட்சியும் இந்த அறிக்கையின் மூலம் குறுகிய அரசியல் ஆதாயங்களைப் பெறமுயன்றதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றுள்ளது. (ந-7)

## பாதாள உலகக்...

குழுக்கள் கருதுகின்றன. அரசாங்கத்தால் கட்டுப்படுத்த முடியாத அளவுக்கு ஒழுங்கமைக்கப்பட்ட பாதாளக் குழுக்களின் செயற்பாடுகள் தீவிரமடைந்துள்ளன என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

கண்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவித்ததாவது,

பொலிஸ் திணைக்களம் முழுமையாக அரசியல்மயமாக்கப்பட்டுள்ளது. இதன் பிரதிபலனாகவே பொலிஸ் திணைக்களத்துக்கும் பதில் பொலிஸ்மா அதிபருக்கும் இடையில் முரண்பாடுகள் தோற்றம் பெற்றுள்ளன.

இந்த முரண்பாடுகள் பொலிஸ் ஆணைக்குழு வரை தொடர்கிறது. இதனால் முழுப் பாதுகாப்புக் கட்டமைப்பும் பலவீனமடைந்துள்ளது. நாட்டில் சட்டம் என்பதொன்று கிடையாது என்று ஒழுங்கமைக்கப்பட்ட பாதாளக் குழுக்கள் கருதுகின்றன.

தமக்கு இணக்கமானவரை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக நியமிக்கும் அளவுக்கு பொலிஸ் சேவை இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது. பொலிஸ் சேவை மாத்திரமல்ல, பாதுகாப்புச் சேவை உட்பட புலனாய்வுப் பிரிவும் இன்று அரசியல் மயப்படுத்தப்பட்டுள்ளது.

அரசியல்மயப்படுத்தப்பட்டுள்ளதால் சட்டத்தின் ஆட்சி வீழ்ச்சியடைந்துள்ளது. பொலிஸ்மா அதிபரைக் கைது செய்வதற்குப் பொலிஸார் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டுள்ளனர்.

இது உலக நகைச்சுவையாகும். தேசபந்து தென்னகோனைப் பொலிஸார் கைது செய்யமாட்டர்கள். உயர் நீதிமன்றத்தின் ஊடாக பிணை பெற்றுக் கொள்வதற்குத் தேசபந்துக்கு சாதகமான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகிறது. அது வரையில் அவர் கைது செய்யப்பட மாட்டார். (ந-7)


## கடை வாடகைக்கு உண்டு

சாவகச்சேரி டச்சு வீதியில் அமைந்துள்ள
16 அடி அகலம் 42 அடி நீளம் கொண்ட
கடை வாடகைக்கு உண்டு.
வியாபாரத் தேவைக்கும் களஞ்சியத்
தேவைக்கும் உகந்த இடம்.

தொடர்புகளுக்கு : 077 288 7740 (C-2477)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலேரியா நோயாளி யாழில் அடையாளம்

## வெளிநாடுகளுக்கு சென்று திரும்பும் போது அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**யாழ். போதனா வைத்தியசாலையில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்ட 23 வயதான இளைஞன் ஒருவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப்பணிப்பாளர் வைத்தியர் சி. யமுனாநந்தா தெரிவித்துள்ளார்.**

நேற்று ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த செய்திக் குறிப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

குறித்த இளைஞன் ஐரோப்பாவிற்குச் செல்வதாக முகவர்களினால் கடந்த வருடம் 2024 மார்கழி மாதம் 28ஆம் திகதி விமானத்தில் கொழும்பு, மும்பை, நைரோபி வழியாக சியாரா லியோன் என்ற மத்திய ஆபிரிக்க நாட்டில் இறக்கிவிடப்பட்ட நிலையில் அவரது பயணம் தடைப்பட்டு சுகவீனமுற்று இருந்தமையால் குடும்பத்தவர்களால் மீளவும் இலங்கைக்கு கடந்த 11ஆம் திகதி அழைக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.


இவரினைப் பாதித்த மலேரியாக் கிருமி பிளாஸ்மோடியம் ஃபல்சிபோறம் என்பதாகும்.

இலங்கையில் மலேரியா நோய் முற்றாக அழிக்கப்பட்டமையினால் மீண்டும் நுளம்பின் மூலம் தொற்றும் மலேரியா நோய் பரவாது இருப்பதற்கு இவ்வாறு வெளிநாடு சென்று மீள்பவர்கள் விமான நிலையத்திலுள்ள வைத்திய அதிகாரியிடமோ அருகில் உள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையிலோ வைத்தியசாலையிலோ அணுகி உரிய மருத்துவ ஆலோசனையும் தடுப்பு மருந்தும் பெறலும் அத்தியாவசியமாகும் என போதானாவின் பிரதிப் பணிப்பாளர் சி. யமுனாநந்தா அறிவித்துள்ளார். (6-8)

# ஏப்ரல் 21 வரைதான் அநுர அரசிற்கு கால அவகாசம்

## ஈஸ்டர் தாக்குதல் குறித்து பேராயர் தெரிவிப்பு

(கொழும்பு)



இலங்கையிலுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்கும் நோக்கிலேயே தற்போதுள்ள ஆட்சியாளர்களை ஆட்சிபீடத்துக்கு ஏற்றினோம். ஆனால் அரசியல் கலாசாரத்தில் மாற்றம் ஏற்படுத்தாமலும் எமக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்றாமலும் இருந்து வந்தால் நாம் மீண்டும் சிந்திக்க வேண்டிய நிலை ஏற்படுமென கொழும்பு மறை மாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை தற்போதுள்ள அரசாங்கத்துக்கு எச்சரிக்கை விடுத்தார்.

காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பிலும், உயிர்த்த ஞாயிறு தின குண்டு தாக்குதல் சம்பவம் தொடர்பில் நீதியை நிலைநாட்டுவதற்கு தற்போது ஆட்சிப்பீடம் ஏறியுள்ள அரசாங்கம் இனியும் காலம் தாழ்த்தக்கூடாது.

இந்த விடயங்கள் தொடர்பான எந்தவொரு விடயத்தையும் இரகசியமாக வைத்துக் கொள்ளாமல், எவருடனும் "டீல்" போடாமல் உண்மையை வெளியே கொண்டு வருவதற்கு விரைந்து செயற்படுமாறு அரசாங்கத்திடம் கேட்டுக் கொண்டார்.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21 ஆம் திகதியன்றுடன் 6 ஆவது ஆண்டு நிறைவு தினத்துக்கு முன்னதாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியைப் பெற்றுக்கொடுப்பதாக கூறிய வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில் நாம் வீதியில் இறங்குவதற்கு பின்னிற்க மாட்டோம் எனவும் பேராயர் குறிப்பிட்டார்.

2025 ஜூபிலி ஆண்டை முன்னிட்டு கொழும்பு மறை மாவட்ட மக்கள் தொடர்பு மத்திய நிலையத்தினால் கொழும்பு பேராயர் இல்லத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை ஏற்பாடு செய்யப்பட்ட விசேட கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்தார். (நி-8)

## தேவையற்ற பொருட்களை

# பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு செல்ல வேண்டாம்

## பரீட்சைகள் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)



2024 ஆம் ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சைக்கு மொத்தம் 474,147 பரீட்சார்த்திகள் விண்ணப்பித்துள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர தெரிவித்துள்ளார்.

அந்த விண்ணப்பதாரர்களில் 398,182 பேர் பாடசாலை பரீட்சார்த்திகளும் 75,968 தனியார் பரீட்சார்த்திகளும் உள்ளனர்.

அத்துடன், இன்று ஆரம்பமாகவுள்ள குறித்த பரீட்சைக்கு பரீட்சை மண்டபத்திற்கு முன்கூட்டியே வருமாறும், தேவையற்ற பொருட்களை பரீட்சை மண்டபத்திற்கு கொண்டு செல்வதைத் தவிர்க்குமாறும் பரீட்சார்த்திகளிடம் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

இதனை மீறும் பட்சத்தில் பரீட்சை குற்றமாக கருதி அதிகபட்ச ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், 5 வருடங்களுக்கு பரீட்சை தடை விதிக்க முடியும் எனவும் அவர் மேலும்தெரிவித்தார்.

இன்று நடைபெறவுள்ள குறித்த பரீட்சை தொடர்பில் நேற்று இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். (ஐ-8)

'ஓம் ஸ்ரீ வீராட் விஸ்வப் பிரம்மனே நமஹ'

சுழிபுரம் அருள்மிகு வீரபத்திரர் சமேத
ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்

வருடாந்தப் பங்குனிப் பொங்கல் உற்சவம்



"இட்டமுட னிகமதிற் சித்திகள் யாவு மன்பற் கருள-பாற்
கிளுவை யதனி லமர்ந்த கம்மியர்க் கிறைவியே
அண்ட கோடி புக ழிலங்க சுழிபுரப் பதி யுறை
பத்திர காளி யென் னம்மையே"

அம்பிகை அடியார்களே...

நிகழும் பங்குனி நான்காம் நாள் 18.03.2025 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறவிருக்கும் "விளக்கு வைப்பு" வைபவத்துடன் ஆரம்பமாகும் அம்பிகையின் பொங்கல் உற்சவமானது வழமை போன்று சிறப்புற நிகழ்வதற்கு திருவருள் கூடியுள்ளது.

- முதலாம் பொங்கல் (பெரிய வேள்வி) 25.03.2025 செவ்வாய்க்கிழமை
- இரண்டாம் பொங்கல் (எட்டாம் மடை) 01.04.2025 செவ்வாய்க்கிழமை

அம்பிகையின் அடியார்கள் இப்பொங்கல் வைபவங்களில் கலந்து இஷ்ட சித்திகளை பெற்றுய்வீர்களாக.

"ஆயிரம் வடிவுடையாளன்னையைப் பரவித் தொழப் பேரானந்த மெய்துமே"

சுபம்

வர்த்தகர்களுக்கான அறிவித்தல் :-

பொங்கல் உற்சவ காலங்களில் வியாபார நடவடிக்கையில் ஈடுபடும் வர்த்தகர்கள் 23.03.2025 ஞாயிறு பி.ப 4.00 மணிக்கு ஆலயத்திற்கு வருகை தந்து தங்களுக்கான இடங்களை பதிவு செய்து அன்றைய தினமே முழுப்பணத்தையும் செலுத்தி உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

பத்திரகாளி அம்பாள் தேவஸ்தானம்,
சுழிபுரம்.

ஆலய பரிபாலன சபையினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# விளையாட்டுச் செய்திகள்

## விக்ரம்-ராஜன்-கங்கு
# வெற்றிக்கிண்ணத்தை தமதாக்கிய கே.சீ.சீ.சீ


நிமல தாஸ்
அதிக இலக்குகள்


சாம்பவன்
ஆட்டநாயகன்




துஷயந் தன்
தொடர்
நாயகன்
அதிகூடிய
ஓட்டம்

விக்ரம்- ராஜன்-கங்கு வெற்றிக் கிண்ணம்- 2025 தொடரின் கடந்த 13 ஆம் திகதி வியாழக்கிழமை கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் கே.சீ.சீ.சீ அணி யாழ் பல்கலைக்கழக அணியை 105 ஓட்டங்களால் வெற்றி பெற்று கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கே.சீ.சீ.சீ அணி துடுப்பாட்டத்தை மேற் கொண்டனர். இறுதியில் கே.சீ.சீ சீ அணி 36.1 ஓவர்களில் 226 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தனர்.

கே.சீ.சீ சீ அணி ஒரு நிலையில் 60 ஓட்டங்களுக்கு 6 இலக்குகளினை இழந்த நிலையில் துஸ்யந்தன், பானு ஜோடியும், துஸ்யந்தன் சாம்பவன் ஜோடியும் போட்டியினை ஓர் உச்ச நிலைக்கு (226 ஓட்டங்கள்) கொண்டு வந்தனர்.

துஸ்யந்தன் -88, பானுஜன்- 50, சாம்பவன் 22 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் யாழ் பல்கலைக்கழக அணி சார்பாக டிலோஜன்25:3 , டெஸ்வின் 41:3, சிறிமேனகன் 36.2 இலக்கு களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய யாழ். பல்கலைக்கழக அணி 29.2 ஓவர்களில் 121 ஓட்டங்களை பெற்று சகல இலக்குகளையும் இழந்தனர்.

பல்கலைக்கழக அணி சார்பாக செராபன் 35, இடமல் கொட - 16, சிலக்ஸான் 15 ஓட்டங்களை பெற்றுள் ளனர்.

பந்து வீச்சில் கே.சீ.சீ சீ அணி சார்பாக சாம்பவன் 18-5, நிமல தாஸ் 18-4, பிரதீஸ் 26-1 இலக்கினையும் கைப்பற் றினர். கே.சீ.சீ.சீ அணி வீரர்களான சாம் பவன்- ஆட்டநாயகனாகவும், துஷ்யந் தன்- தொடர் நாயகன் மற்றும் அதிகூடிய ஓட்டங்களைப் பெற்றமைக்காக நிமல தாஸ்- அதிக இலக்குகளை கைப்பற்றி யமைக்கும் விருதுகளை தட்டிச் சென்றனர். (6-8)

# கபடி போட்டி முடிவுகள்



குருநகர் பாடும்மீன் அணி



யாழ்.பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அணிகளுக்கு இடையிலான கபடி போட்டியில் குருநகர் பாடும்மீன் அணி ஆண்கள் பெண்களுக்கான இரு போட்டிக ளிலும் சம்பியன் கிண்ணத்தைச் சுவீக ரித்துக் கொண்டனர்.

யாழ்.பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட அணிகளுக்கிடையிலான கபடிப் போட்டி அண்மையில் கலைவாணி மைதானத்தில் நடைபெற்றது.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் பாடும்மீன் அணியை எதிர்த்து ஜெற் லயன்ஸ் அணி மோதியது. ஆரம்பம் முதலே போட்டியை தம் வசம் வைத் திருந்த ஜெற்லயன்ஸ் அணி துரித கதியில் புள்ளிகளை பெற்று முதல் பாதி ஆட்டத்தில் முன் னிலை வகித்தது.

இருப்பினும் இடைவேளை க்கு பின்னரான ஆட்டத்தில் பல வியூகங்களை வகுத்து களம் இறங்கிய பாடும்மீன் அணி ஆட் டத்தில் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர் . இதனால் பாடும்மீன் அணியின் புள்ளிகள் உயர பரபரப்புக்கு பஞ்சமில்லா ஆட்டமாகவும் விறுவிறுப்பாக வும் ஆட்டம் மாற ஆட்ட நேர முடிவில் பாடும்மீன் அணி 34:26 எனும் புள்ளிகள் அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். அதேவேளை பெண்களுக்கான இறுதியாட்டத்தில் பாடும்மீன் அணியை எதிர்த்து அன்ர னிஸ் அணி மோதியது. ஆரம்பம் முதலே போட்டியை தம் வசம் வைத்திருந்த பாடும்மீன் அணி அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்த அன்ரனிஸ் அணியின ரால் புள்ளிகளை பெறுவதில் திணறி னர். இதனால் ஆட்ட நேர முடிவில் பாடும் மீன் அணி 32:4 எனும் புள்ளிகள் அடிப்படையிலே வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண் டமை குறிப்பிடத்தக்கது. (6-8-90)

# மகளிர் பிரிமீயர் லீக்
## சம்பியனான மும்பை இந்தியன்ஸ்



மகளிர் பிரீமியர் லீக்ஸின் பரபரப்பான இறுதிப் போட்டியில் டில்லி அணியை வீழ்த்தி 2 ஆவது முறை யாக கோப்பையை வென்று சம்பியனான மும்பை இந்தியன்ஸ்

மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் மும்பையில் நேற்று முன்தி னம் நடைபெற்ற இறுதிப்போட்டியில் மும்பை இந்தியன்ஸ் மற்றும் டில்லி கேபிடல்ஸ் அணிகள் விளையா டின.

இந்தப் போட்டியில் டாஸ் வென்ற டில்லி கேபிடல்ஸ் அணி பந்துவீச்சைத் தேர்வு செய்ய, மும்பை இந்தியன்ஸ் அணி முதலில் விளையாடியது.

முதலில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களின் முடிவில் 7 விக்கெட்டுகளை இழந்து 149 ரன்கள் எடுத்தது.

அந்த அணியில் அதிகபட்சமாக கப்டன் ஹர்மன்பிரீத் கௌர் 66 ரன்கள் எடுத்தார். அவரைத் தொடர்ந்து, நாட் ஷிவர் பிரண்ட் 30 ரன்களும், அமன்ஜோத் கௌர் 14 ரன்களும் எடுத்தனர்.

பின்னர், 150 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய டில்லி அணியால் 9 விக்கெட் இழப்புக்கு 141 ரன்கள் மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால், மும்பை அணி 8 ரன்கள் வித்தி யாசத்தில் திரில் வெற்றிபெற்று 2 ஆவது முறையாக சம்பியன் பட்டத்தை வென்றது.

டில்லி அணியில் அதிகபட்சமாக மரிசான்னே காப் 40 ரன்களும், ஜெமிமா ரோட்ரிக்ஸ் 30 ரன்களும் எடுத்தனர். மும்பை அணியில் சிறப்பாக பந்துவீசிய நாட் ஸ்கைவர்-பிரண்ட் 3 விக்கெட்டுகளை வீழ்த்தி அசத்தினார்.

மகளிர் பிரீமியர் லீக்கின் 3 ஆவது தொடரில் இறுதிப்போட்டிக்கு தகுதிபெற்ற டில்லி 3 ஆவது முறையாகவும் இறுதிப்போட்டியில் தோல்வியைத் தழுவியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையுடனான கடன் மறுசீரமைப்பு 7 பில்லியன் டொலர் சீனாவுக்கு நஷ்டம்

## சீனத் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையுடனான வெளிநாட்டுக் கடன்மறுசீரமைப்பை மேற்கொண்டதன் காரணமாக சீனாவின் பிரதான ஏற்றுமதி, இறக்குமதி பங்குதாரரான சீன எக்ஸிம் வங்கிக்கு 7 பில்லியன் அமெரிக்க டொலர்கள் நட்டம் ஏற்பட்டுள்ளது என சீனத் தூதுவர் கீ சென்ஹொங் தெரிவித்தார்.

அத்துடன், தெற்காசியாவில் இலங்கை, இந்தியா, சீனா ஆகியன ஒன்றிணைந்து "கூட்டுச் செயற்றிட்டமொன்றை" முன்னெடுக்க வேண்டும் என்பது எனது கனவாக உள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள சீனத் தூதரகத்தில் சீனத்தூதுவர் கீ சென்ஹொங்கிற்கும் ஊடகப் பிரதிநிதிகளுக்கும் இடையில், உரையாடல் நேற்று நடைபெற்றது. இதன்போது கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையுடன் சீனாவே முதன்முதலாக கடன்மறுசீரமைப்பு ஒப்பந்தத்தினை கைச்சாத்திட்டது. அந்த வகையில் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கு முதலில் இணங்கிய நாடாகவும் சீனா இருக்கின்றது. ஆனால் இந்தியா உள்ளிட்ட ஏனைய நாடுகள் இன்னமும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்புக்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடவில்லை.

அதேநேரம், இலங்கையுடனான கடன்மறுசீரமைப்பை சீனா மேற்கொண்டதன் மூலமாக பெருந்தொகையான நிதியை இழந்துள்ளது.

இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்காக சீனா பெருந்தியாகத்தைச் செய்துள்ளதோடு அதிகளவான பங்களிப்பையும் வழங்கியுள்ளது. ஆனால் அந்த விடயங்களை சீனா பிரசாரம் செய்வதில்லை எனத் தெரிவித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இந்த ஆண்டின் முற்பகுதியில் சீனாவுக்கு விஜயம் செய்தார். அவரது விஜயத்தின் போது 15 உடன்படிக்கைகள் கைச்சத்தாகியுள்ளதோடு, அவை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கும் இரு நாட்டுத் தலைவர்களும் இணங்கியுள்ளனர்.

இதன்மூலமாக இருநாட்டுப் பிரஜைகளும் அதிகளவான நன்மைகளை அடையவுள்ளனர் எனத் தெரிவித்தார். (ஙி-8)

# பட்டலந்த அறிக்கை; ஏப்ரல் 10 இல் விவாதம்

(கொழும்பு)

பட்டலந்த ஆணைக்குழு அறிக்கை மீதான பாராளுமன்ற விவாதம் ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகும் என பாராளுமன்ற தொடர்பாடல் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த விவாதம் இரு கட்டங்களாக நடைபெறும் என்று பட்டலந்த ஆணைக்குழுவின் செயலாளர் ஜயலத் பெரேரா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் முதல்நாள் விவாதத்தை ஏப்ரல் 10 ஆம் திகதியும், இரண்டாம் நாள் விவாதத்தை மே மாதமளவிலும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஙி-8)

# செவ்வந்தி மாலைதீவில் வெளியாகியுள்ள தகவல்

(கொழும்பு)

கணேமுல்ல சஞ்சீவ கொலைக்கு மூளையாக செயற்பட்டதாகக் கருதப்படும் பிரதான சந்தேகநபரான இஷாரா செவ்வந்தி, கடல் வழியாக மாலைதீவுக்குத் தப்பிச் சென்றிருக்கலாம் என சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

பொலிஸார் தேடலை ஆரம்பிக்க முன், ஒரு சக்திவாய்ந்த பாதாள உலகக் கும்பலைச் சேர்ந்த ஒருவரால் செவ்வந்தி மாலைதீவுக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளதாக தகவல்கள் கசிந்துள்ளன. மேலும், இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் வெளிநாட்டில் இருக்கும் பாதாள உலகக் கும்பலின் உறுப்பினர் ஒருவர் கையாண்டுள்ளதாக மேற்கண்ட வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன. (ஙி-8)


**யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி சங்கம் (யாழ்கோ) இற்கு நெறியாளர் குழு உறுப்பினர்கள் தெரிவு- 2025**

யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் உப விதிப்பிரிவு 35.1 இற்கு அமைவாக இரண்டு நெறியாளர் குழு உறுப்பினர்களை மாவட்ட அரசாங்க அதிபரின் சிபாரிசுடன் நியமிக்க வேண்டும். இந் நிறுவனமானது கலாசாலை வீதி, திருநெல்வேலியில் தலைமைக் காரியாலயத்தினை கொண்டு இயங்கி வருகின்றது.

விண்ணப்பதாரர்களின் தகைமை, விண்ணப்பம் பெற்றுக்கொள்ளல், விண்ணப்பம் அனுப்புதல் போன்ற விபரங்களையும் **Expression of Interest** படிவத்தினையும் **jaffna.dist.gov.lk** எனும் மாவட்ட செயலக இணைத்தளத்தில் பார்வையிடவும் தரவிறக்கம் செய்து கொள்ளவும் முடியும்.

- **விண்ணப்ப முடிவுத் திகதி**

மாவட்ட செயலகத்திற்கு நேரடியாகவோ அல்லது மாவட்ட செயலாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ 2025.03.28 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்பதாக மாவட்ட செயலகத்திற்கு கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

**மாவட்டச் செயலாளர்/ அரசாங்க அதிபர் (பதில்)**
**யாழ்ப்பாண மாவட்டம்.**

(சி-2474)


# பாதுகாப்பாக வாகனம் செலுத்தும் சாரதிகளுக்கு இனி வெகுமதி

## பொலிஸாரின் புதிய திட்டம்

(கொழும்பு)

கண்ணியமான சாரதிகளுக்காக எதிர்காலத்தில் வெகுமதி திட்டத்தை நடைமுறைப்படுத்த இலங்கை பொலிஸார் திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி வாகன சாரதிகள் பாதுகாப்பான முறையில் வாகனங்களைச் செலுத்த வேண்டும் என பொலிஸார் கோரியுள ளனர்.

பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவின் ஆலோசனைக்கமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் இடம்பெற்ற 412 வீதி விபத்துக்களில் 431 பேர் உயிரிழந்தனர்.

அந்த காலப்பகுதியினுள் நாடளாவிய ரீதியாக 925 பாரிய சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

பொலிஸ் அறிக்கைகளுக்கு அமைய இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ள நிலையில் குறித்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ஙி-8)

# இராசிபலன்

17.03.2025
பங்குனி 03, திங்கட்கிழமை
திருதியை முன்னிரவு 6.23மணிவரை

சித்திரை பிற்பகல் 1.46மணிவரை
சுபநேரம் 12.19-1.49 மணிவரை
இராகுகாலம் 7.49-9.19மணிவரை
சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம்
பூரட்டாதி, உத்தரட்டாதி

வளவன்




நண்பர்கள் நம்பிக்கைக்குப் பாத்திரமாக விளங்குவர், புதிய பொருட்களை வாங்கி மகிழும் எண்ணம் உருவாகும், உறவினர்கள் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், உடல் நலன் சீராகும்.




இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு, தேவைகள் பூர்த்தியாகும் நாள், புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.




தொழிலில் புதிய பொறுப்புக்களை யோசித்து எடுப்பது நல்லது, தேக நலனில் அக்கறை கூடும், மகிழ்ச்சி அதிகரித்து மனமாற்றம் காணும் நாள், பயணங்களால் பலனுண்டு.




சான்றோர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள், எண்ணிய காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.




குடும்பத்தில் சுகங்களும் சந்தோஷங்களும் அதிகரிக்கும், கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், தொழில் வியாபாரம் தொடர்பாக எடுத்த முயற்சிகள் கைகூடும்




உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், உறவு பகை பாராமல் உதவி செய்யும் நாள், கௌரவம் அந்தஸ்து உயரும் நாள், உடன்பிறப்புக்களின் வழியில் ஒத்துழைப்புக் கிடைக்கும், போசன சுகமுண்டு.




சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், சயன சுகக்குறைபாடுகள் ஏற்படலாம்.




நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், அலுவலக பணிகள் துரிதமாக நடைபெறலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




பிரியமான சிலருடன் மனம் விட்டுப் பேசுவீர்கள், நண்பர்கள் மத்தியில் நல்ல பெயர் கிடைக்கும், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலத் தரும், நன்மைகள் நாடி வரும் நாள்.




தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகள் கைகூடும், சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், வங்கிச் சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், வாக்குமேன்மையுண்டு.




இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், வீட்டுத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும்.




தொழில் ரீதியான பயணங்களின் போது கூடுதல் விழிப்புணர்வு தேவை, உடல் நலனில் கவனம் தேவை, காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள்.

கோபத்தோடு வருபவனிடத்தில் குளிர்ந்த முகத்தோடு பேசு அவர் கோபம் தணிந்து விடும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கோணேச்சர திருப்பணி; இந்திய அரசு கரிசனை செலுத்த வேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வரவுள்ள நிலையில் குறித்த விஜயத்தின் போது திருகோணமலை திருக்கோணேச்சர திருக் கோவிலைத் தரிசிக்க வேண்டும் எனவும் திருக் கோணேச்சர திருப்பணியில் இந்திய மத்திய அரசு அக்கறை கொள்ள வேண்டும் எனவும் அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகங் களுக்கு அனுப்பி வைத்தி செய்தி குறிப்பிலே இவ்வாறு தெரிவித்தார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது, அந்நியர் ஆட்சிக் காலத்தில் அழிக்கப்பட்ட திருக் கேதீச்சர தலத்தை இந்திய மத்திய அரசாங்கம் கடந்த கால த்தில் கருங்கல்லால் பாரிய சிற்பக்கோவிலாக மாற்றி அமைத்து. அதற்கு இலங்கை வாழ் இந்துக்கள் என்றும் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ள னர்.

திருக்கேதீச்சர திருத்தலம் போல் மிகத் தொன்மை வாய்ந்த திருக்கோணேச்சர திருத்தலமும் முக்கியத்துவம் பெறுகிறது. போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் இப்பெருங் கோவில் முற்றாக அழிக்கப் பட்டது. தற்போது இவ்வாலயம் ஓர் சிறிய நிலப்பரப்பில் பல்வேறு இடையூறுகளுக்கு மத்தியில் மீள்நிர்மாணம் பெற்றுள்ளது. முழுமையான கோவில் கட்டப் படவில்லை. இந்திய அரசு இவ்வாலயத்தை முழுமையாக நிர்மாணித்து காப்பாற்ற வேண்டும் என இந்துமக்கள் சார்பில் நன்றியோடு வேண்டு கின்றோம்.

அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் திருக்கோணேச் சரத்துக்கு வருகைதந்து ஆலய நிர்வாக சபையுடனும் எம்மோ டும் இவ்வாலய எதிர்காலம் பற்றி கேட்டறிந்து கொண்டார். இந்திய தூதுவராலயம் தொடர்ந்து திருக்கோணேச்சர திருப்பணி தொடர்பான விப ரங்களை ஆராய்ந்துள்ளதுடன்



ஆலய நிர்வாக சபையை அழைத்து பேசியுள்ளார்கள். தங்களது இலங்கை பயணத் தில் இத்திருத்தலம் தொடர்பாக உரிய அக்கறை எடுக்குமாறு வேண்டுவதாக அதில் குறிப் பிடப்பட்டுள்ளது. (6-8)

# சட்டவிரோத செயல்களை புரிபவர்கள் பொலிஸாருடன் நட்பு

## மக்கள் முறைப்பாடுகளை முறையிட தயக்கம் ஆளுநர் சுட்டிக்காட்டு

(கிளிநொச்சி)

சட்டவிரோத செயற் பாடுகளை முன்னெடுப்பவர் கள் பொலிஸாருடன் நட்பாக இருப்பதால், பொலிஸாரிடம் முறைப்பாடுகளை மேற்கொள் வதற்கு மக்கள் அஞ்சுகின்ற னர். இது ஆபத்தான நிலைமை என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேத நாயகன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி கல்வி வளர்ச்சி அறக்கட்டளையின் 15ஆவது ஆண்டு நிறைவு விழா, கிளிநொச்சி மாவட்ட திறன் விருத்தி பயிற்சி நிலையத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை அறக்கட்டளையின் தலைவரும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைப் பணிப்பாளருமான மருத்துவக் கலாநிதி த.சத்தியமூர்த்தி தலைமையில் நடைபெற் றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஆளுநர், கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அறக்கட்டளையின் 15 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு உருவாக்கப்பட்ட மலரை வெளியிட்டு வைத் ததுடன் அறக்கட்டளையின் வளர்ச்சிக்காக அரும்பணி யாற்றியவர்களும் இதன் போது கௌரவிக்கப்பட்ட னர்.

இந்த நிகழ்வில், கிளி நொச்சி மாவட்ட பதில் செயலர் சு.முரளிதரனும் கலந்து கொண்டார். (6-8)

# மருதடி விநாயகர் ஆலய மஹோற்சவ விஞ்ஞாபனம்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநா யகர் ஆலய வருடாந்த மஹோ ற்சவ விஞ்ஞாபனம் எதிர்வரும் 22 ஆம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாக உள்ளது.

தொடர்ந்து 25 தினங்கள் இடம்பெறவுள்ள மஹோற் சவத்தில் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 13 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 7.30 மணி க்கு சப்பறத்திருவிழாவும், 14 ஆம் திகதி திங்கட்கிழமை நண்பகல் 12 மணிக்கு இர தோற்சவமும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு தீர்த்தோற் சவமும் இடம்பெறவுள்ளது என மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (நி-8)

# விண்ணில் பாய்ந்த விண்கலம் விரைவில் பூமிக்கு திரும்பும் சுனிதா



(வோஷிங்டன்)

கடந்த 9 மாதங்களாக விண் வெளியில் தங்கி இருக்கும் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோரை பூமிக்கு அழைத்து வரு வதற்கான விண்கலத்தை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனம் விண்வெளிக்கு செலு த்தியுள்ளது.

நேற்று முன்தினம் அதிகாலை 4.33 மணிக்கு ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் விண்ணில் பாய்ந்ததாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

சர்வதேச விண்வெளி நிலையத் திற்கு கடந்த வருடம் ஆய்வு பணிக்காக சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர் சென்றிருந்தனர்.

ஒரு வார காலம் தங்கியிருந்து ஆய்வு பணிகளை மேற்கொள்ள திட்ட மிடப்பட்டு இருந்தது. ஆனால் ஸ்டார் லைனர் விண்கலத்தில் தொழில்நுட்ப கோளாறு ஏற்பட்டு இருவரும் பூமிக்கு திரும்ப முடியாத சூழல் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு செப்ரெம்பர் 7 ஆம் திகதி ஸ்டார்லைனர் விண்கலம், ஆட் கள் இன்றி வெறுமையாக பூமிக்கு திரும்பியது.

சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகியோர், ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலத் தின் மூலம் நேற்று அழைத்து வரப்ப டுவார்கள் என்று தெரி விக்கப்பட்டது.

இந்த நிலையில் 9 மாதங்களுக்கு பிறகு அமெரிக்க விண்வெளி வீரர்களை பூமிக்கு அழைத்து வர ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் நாசா நிறுவனம் இணைந்து விண்கலம் ஒன்றை அனுப்ப திட்டமிட்டிருந்தது.

ஆனால், கடந்த 13ஆம் திகதி அதி காலை 5:30 மணிக்கு விண்ணில் செலுத்தவிருந்த ஸ்பேஸ் எக்ஸ் விண் கலம் ஏவுதளத்தில் இருந்த ஹைட்ராலிக் இயந்திரத்தில் திடீரென்று தொழில் நுட்பக் கோளாறு ஏற்பட்டது.

இந்த நிலையில், தொழில்நுட்பக் கோளாறு சரி செய்யப்பட்டு நேற்று முன்தினம் அதிகாலை 4.33 மணிக்கு ஸ்பேஸ் எக்ஸ் விண்கலம் விண்ணில் பாய்ந்தது. சுனிதா வில்லியம்ஸை அழைத்து வர அமெரிக்க விண்வெளி மையத்தில் இருந்து பால்கன் 9 விண்கலம் மூலம் விண்ணில் பாய்ந்த என்டூரன்ஸ் விண்கலத்தில் அமெரிக்க, ஜப்பான், ரஷ்யாவை சேர்ந்த விண்வெளி வீரர்கள் பயணம் மேற்கொண்டுள்ளனர்.

நாளை மறுதினம் 19 ஆம் திகதி வில்மோர் மற்றும் சுனிதா வில்லியம்ஸ் இருவரும் இந்த விண்கலத்தில் பூமிக்கு திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப் படுகிறது. (நி-8)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு : 1992- இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 16<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்: O/L.வியாபாரம் (own)<br>எதிர்பார்ப்பு :தகுதியான பெண்<br>தொ.இ: B/15226 | பிறப்பு : 1991 -இந்து<br>நட்சத்திரம் - சுவாதி<br>உயரம் : 5'7"<br>தகைமை/தொழில்:BA, Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/15242 |
| பிறப்பு:1994 -இந்து<br>நட்சத்திரம்:பூசம்<br>கி.பா: 60 1/2<br>8இல் செவ்<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில்- HNDA,TO<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: B/15229 | பிறப்பு: 2001-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கிபா-33 1/2<br>7இல் செவ்<br>உயரம் : 5'6"<br>தகைமை/தொழில்-BioTechnology (student)<br>எதிர்பார்ப்பு: தகுதியானஆண்<br>தொ.இ: G/15243 |
| பிறப்பு: 1986- இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம் :5'7"<br>தகைமை/தொழில்: MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்,விவாகரத்தானவர்கள்<br>தொ.இ: B/15231 | பிறப்பு: 1997 - இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி-பா: 40<br>1இல்செவ்<br>உயரம் :5'4"<br>தகைமை/தொழில்:BBST,Teacher<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/15246 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நிறைவேற்றுநர் சேவையினரின் SL-I சம்பள அதிகரிப்புக்கள்



அன்பு ஜவஹர்ஷா

மார்ச் மாதம் 13 ஆம் திகதி கிடைத்த தகவலின்படி 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட ஆலோனையின்படி அரசாங்க ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக 21 ஆம் திகதி வரவு செலவுத் திட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர், ஒரு வாரத்தில் அதாவது 28 ஆம் திகதியளவில் இது தொடர்பாக அரசாங்க நிருவாக சுற்றறிக்கை வெளியிட ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

அரச சேவையில் 36 பொது அரச சேவை சம்பள வகுதிக்கும் தபால் சேவை, கணக்காய்வு சேவை, கிராமசேவகர் சேவை, நீதித்துறை சேவை, பல்கலைக்கழக சேவை, ஆயுதப்படை உட்பட பல அரச சேவைகளுக்கு இந்த ஆலோசனையின்படி சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பளத் திட்டங்களைத் தீர்மானிக்கும் போது அரசதுறை சம்பளத்தைப் பொறுத்தவரையில் ஆரம்ப மட்டத்தையும் அமைச்சுக்களின் செயலாளர் மட்டத்தையும் வைத்து ஒரு அளவுகோல் தீர்மானிக்கப்படுகின்றது. கடைசியாக வெளிவந்த 03/2016 பொது நிருவாகச் சுற்றறிக்கைப்படி ஆரம்ப மட்டத்தின் ஆரம்ப அடிப்படைச் சம்பளம் 34, 250 ரூபாவாகும். அதே நேரத்தில் SL4 என்ற சம்பளக் குறியீட்டில் உள்ள செயலாளர்களின் ஆரம்ப அடிப்படைச் சம்பளம் 98, 650 ரூபாவாகும். இது 1:4.07 என்ற விகிதாசாரத்தின் படி உள்ளது.

2025.01.01 முதல் கடந்த அரசாங்கம் அதில் நடத்துவதாக விளம்பரம் செய்த உதய ஆர் செனவிரத்தினவின் சம்பளக் குழு அறிக்கையில் 1:6 என்ற விகிதாசாரத்தில் இருந்தது. ஆரம்ப மட்ட அடிப்படைச் சம்பளம் 30, 000 ரூபாவாகவும் செயலாளர்களின் அடிப்படைச் சம்பளம் 180,000 ரூபாவாகவும் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. இது பாரிய முரண் பாட்டை உண்டாக்கும் என்றபடியால் 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் 40, 000 ரூபா- 175, 000 ரூபா என்ற வகையில் 4:37 என்ற விகிதாசாரத்தின்படி தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய சேவை அல்லது அகில இலங்கை சேவை அல்லது தீவக சேவை அல்லது நிறைவேற்றுநர் சேவை தொடர்பாக இந்த ஆக்கத்தில் இதை இங்கு குறித்துக்காட்ட வேண்டும்.

மேல் சொல்லப்பட்ட பதவிநிலை சேவைகளில் பின்வரும் சேவைகள் உள்ளடங்குகின்றன.

1. இலங்கை அரசாங்க நிர்வாகசேவை
2. இலங்கை பொறியியல் சேவை
3. இலங்கை விஞ்ஞான சேவை
4. இலங்கை கட்டடக்கலைஞர் சேவை
5. இலங்கை கல்வி நிருவாக சேவை
6. இலங்கை கணக்காளர் சேவை
7. இலங்கை திட்டமிடல் சேவை
8. இலங்கை விலங்கு உற்பத்தி சுகாதார சேவை
9 இலங்கை மருத்துவ சேவை
10 இலங்கை நில அளவையாளர் சேவை
11. இலங்கை சுதேச மருத்துவ சேவை
12. இலங்கை கமத்தொழில் சேவை

என்ற 12 சேவைகளோடு SL-I 2016 என்ற சம்பளக்குறியீட்டின் கீழ் சம்பள முறைமையைக் கொண்டு இருக்கும். இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவையினரும் 03/2016 ஆம் இலக்க அரசாங்க நிருவாக சுற்றறிக்கையின் படி பின்வரும் ரூபா 47, 615-10X 1335-8X 1630-17X2170-110,895 என்ற சம்பள முறைமையைப் பெற்றுக்கொண்டு இருக்கின்றார்கள்.

2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் படி இவர்களது சம்பளமானது பின்வரும் முறைமையின்கீழ் உள்ளது. சம்பளக் குறியீடு SL-I 2025 ஆகும். ரூபா 82,150-10X 2400-8X2940-17X3900-195, 970/= இங்குள்ள வகுப்பு III, வகுப்பு II, வகுப்புI என்ற மூன்று அட்டவணைகளும் ஒட்டுமொத்தமாக இந்த சம்பளத்தை வைத்து பிரித்தே தயாரிக்கப்பட்டுள்ளது.

கசப்பாக இருந்தாலும் மேல் சொல்லப்பட்ட விகிதாசார அடிப்படையில் ஒரு உண்மையை இங்கு சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. ஆரம்பமட்ட ஊழியர்களுக்கு 20 மாதங்களில் 8230 ரூபா சம்பள அதிகரிப்பு கிடைக்குமதேநேரத்தில் அமைச்சுக்களின் செயலாளர்களின் சம்பளமானது 91, 150 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது. சேவைக்காலம் கூடியவர்களுக்கு இதைவிட அதிகரிப்பு கிடைக்கும். விதவைகள், அநாதைகள் ஓய்வூதிய நிதிக்கான 8% அறவீடு கூடுவதால் இந்த அதிகரிப்பு குறையும். உதய ஆர் செனவிரத்தின அறிக்கை அமுலில் வந்தால் இந்த வித்தியாசம் இதைவிட அதிகமாக இருக்கும் என்பதை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

சுற்றறிக்கை 28.03.2025 அன்று வெளியிடப்பட்டு ஏப்ரல் 10 ஆம் திகதி சம்பளத்துடன் அதிகரிப்பை வழங்குவது சாத்தியமா என்ற கேள்வியும் அரசாங்க ஊழியர்களிடையே உள்ளது.

2016.02.25 அன்று வெளியிடப்பட்ட 03/2016 ஆம் இலக்கம் கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை 2016 - 2020 வரை ஐந்து வருட காலத்துக்கு சம்பளம் வழங்கும் அட்டவணையைக் கொண்ட, சம்பள மாற்றக் கடிதங்கள், பின்ணிணைப்புக்களுடன் கூடிய 116 பக்கங்கள் கொண்ட சுற்றறிக்கைப் புத்தகமாகும். இவ்வாறு சகல அறிவுறுத்தல்களையும் உள்ளடக்கிய சுற்றறிக்கைப் புத்தகமொன்றே 21 ஆம் திகதிக்கு பின்னர் 28 ஆம் திகதிக்கு முன்னர் பொது நிருவாக அமைச்சின் இணையளத்தளத்தில் வெளியாகும்.

தனித்தனி சம்பள மாற்றக் கடிதங்கள் தயாரிக்க காலம் எடுக்கும். ஆகையால் இங்குள்ள அட்டவணையில் உள்ளதைப் பார்த்து அடிப்படைச் சம்பளத்தைப் பதிந்து 5000 ரூபா, 2500 ரூபா படிகளை வெட்டிவிடலாம். பின்னர் வசதி போல சம்பள மாற்றக் கடிதங் களைத் தயாரித்து வழங்கலாம். பல அரசாங்க காரியாலயங்களில் விசாரித்த போது ஏப்ரல் மாதம் 10 ஆம் திகதி சம்பளத்துடன் அதிகரிக்கப்பட்ட சம்பளத்தை வழங்கத் தயார் நிலையில் இருப்பதாகவே தகவல் கிடைத்துள்ளன.

சம்பள மாற்றியமைப்பு -2025

நிறைவேற்று அலுவலர் -1

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 76,175.00 | 133,570.00 | 57,395.00 | 44,895.00 | 102,143.50 | 117,856.75 | 133,570.00 |
| 2,170.00 | 3,900.00 | | | | | |
| 78,345.00 | 137,470.00 | 59,125.00 | 46,625.00 | 104,832.50 | 121,151.25 | 137,470.00 |
| 80,515.00 | 141,370.00 | 60,855.00 | 48,355.00 | 107,521.50 | 124,445.75 | 141,370.00 |
| 82,685.00 | 145,270.00 | 62,585.00 | 50,085.00 | 110,210.50 | 127,740.25 | 145,270.00 |
| 84,855.00 | 149,170.00 | 64,315.00 | 51,815.00 | 112,899.50 | 131,034.75 | 149,170.00 |
| 87,025.00 | 153,070.00 | 66,045.00 | 53,545.00 | 115,588.50 | 134,329.25 | 153,070.00 |
| 89,195.00 | 156,970.00 | 67,775.00 | 55,275.00 | 118,277.50 | 137,623.75 | 156,970.00 |
| 91,365.00 | 160,870.00 | 69,505.00 | 57,005.00 | 120,966.50 | 140,918.25 | 160,870.00 |
| 93,535.00 | 164,770.00 | 71,235.00 | 58,735.00 | 123,655.50 | 144,212.75 | 164,770.00 |
| 95,705.00 | 168,670.00 | 72,965.00 | 60,465.00 | 126,344.50 | 147,507.25 | 168,670.00 |
| 97,875.00 | 172,570.00 | 74,695.00 | 62,195.00 | 129,033.50 | 150,801.75 | 172,570.00 |
| 100,045.00 | 176,470.00 | 76,425.00 | 63,925.00 | 131,722.50 | 154,096.25 | 176,470.00 |
| 102,215.00 | 180,370.00 | 78,155.00 | 65,655.00 | 134,411.50 | 157,390.75 | 180,370.00 |
| 104,385.00 | 184,270.00 | 79,885.00 | 67,385.00 | 137,100.50 | 160,685.25 | 184,270.00 |
| 106,555.00 | 188,170.00 | 81,615.00 | 69,115.00 | 139,789.50 | 163,979.75 | 188,170.00 |
| 108,725.00 | 192,070.00 | 83,345.00 | 70,845.00 | 142,478.50 | 167,274.25 | 192,070.00 |
| 110,895.00 | 195,970.00 | 85,075.00 | 72,575.00 | 145,167.50 | 170,568.75 | 195,970.00 |

சம்பள மாற்றியமைப்பு -2025

நிறைவேற்று அலுவலர்-11

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 62,595.00 | 109,090.00 | 46,495.00 | 33,995.00 | 85,293.50 | 97,191.75 | 109,090.00 |
| 1,630.00 | 2,940.00 | | | | - | - |
| 64,225.00 | 112,030.00 | 47,805.00 | 35,305.00 | 87,316.50 | 99,673.25 | 112,030.00 |
| 65,855.00 | 114,970.00 | 49,115.00 | 36,615.00 | 89,339.50 | 102,154.75 | 114,970.00 |
| 67,485.00 | 117,910.00 | 50,425.00 | 37,925.00 | 91,362.50 | 104,636.25 | 117,910.00 |
| 69,115.00 | 120,850.00 | 51,735.00 | 39,235.00 | 93,385.50 | 107,117.75 | 120,850.00 |
| 70,745.00 | 123,790.00 | 53,045.00 | 40,545.00 | 95,408.50 | 109,599.25 | 123,790.00 |
| 72,375.00 | 126,730.00 | 54,355.00 | 41,855.00 | 97,431.50 | 112,080.75 | 126,730.00 |
| 74,005.00 | 129,670.00 | 55,665.00 | 43,165.00 | 99,454.50 | 114,562.25 | 129,670.00 |
| 75,635.00 | 132,610.00 | 56,975.00 | 44,475.00 | 101,477.50 | 117,043.75 | 132,610.00 |
| 77,265.00 | 135,550.00 | 58,285.00 | 45,785.00 | 103,500.50 | 119,525.25 | 135,550.00 |
| 78,895.00 | 138,490.00 | 59,595.00 | 47,095.00 | 105,523.50 | 122,006.75 | 138,490.00 |
| 80,525.00 | 141,430.00 | 60,905.00 | 48,405.00 | 107,546.50 | 124,488.25 | 141,430.00 |
| 82,155.00 | 144,370.00 | 62,215.00 | 49,715.00 | 109,569.50 | 126,969.75 | 144,370.00 |

சம்பள மாற்றியமைப்பு -2025

நிறைவேற்று அலுவலர்-111

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|
| 2025.03.31 அடிப்படைச் சம்பளம் | 2025.04.01 புதிய சம்பளம் | மொத்த அதிகரிப்பு 2-1 | 3- கழித்தல் படிகள் 5,000.00+7,500.00 | 2025.04.01 அடிப்படைச் சம்பளம் | 2026.01.01 அடிப்படைச் சம்பளம் | 2027.01.01 அடிப்படைச் சம்பளம் |
| 47,615.00 | 82,150.00 | 34,535.00 | 22,035.00 | 66,725.50 | 74,437.75 | 82,150.00 |
| 1,335.00 | 2,400.00 | | | | - | - |
| 48,950.00 | 84,550.00 | 35,600.00 | 23,100.00 | 68,380.00 | 76,465.00 | 84,550.00 |
| 50,285.00 | 86,950.00 | 36,665.00 | 24,165.00 | 70,034.50 | 78,492.25 | 86,950.00 |
| 51,620.00 | 89,350.00 | 37,730.00 | 25,230.00 | 71,689.00 | 80,519.50 | 89,350.00 |
| 52,955.00 | 91,750.00 | 38,795.00 | 26,295.00 | 73,343.50 | 82,546.75 | 91,750.00 |
| 54,290.00 | 94,150.00 | 39,860.00 | 27,360.00 | 74,998.00 | 84,574.00 | 94,150.00 |
| 55,625.00 | 96,550.00 | 40,925.00 | 28,425.00 | 76,652.50 | 86,601.25 | 96,550.00 |
| 56,960.00 | 98,950.00 | 41,990.00 | 29,490.00 | 78,307.00 | 88,628.50 | 98,950.00 |
| 58,295.00 | 101,350.00 | 43,055.00 | 30,555.00 | 79,961.50 | 90,655.75 | 101,350.00 |
| 59,630.00 | 103,750.00 | 44,120.00 | 31,620.00 | 81,616.00 | 92,683.00 | 103,750.00 |
| 60,965.00 | 106,150.00 | 45,185.00 | 32,685.00 | 83,270.50 | 94,710.25 | 106,150.00 |
| 62,300.00 | 108,550.00 | 46,250.00 | 33,750.00 | 84,925.00 | 96,737.50 | 108,550.00 |
| 63,635.00 | 110,950.00 | 47,315.00 | 34,815.00 | 86,579.50 | 98,764.75 | 110,950.00 |
| 64,970.00 | 113,350.00 | 48,380.00 | 35,880.00 | 88,234.00 | 100,792.00 | 113,350.00 |
| 66,305.00 | 115,750.00 | 49,445.00 | 36,945.00 | 89,888.50 | 102,819.25 | 115,750.00 |
| 67,640.00 | 118,150.00 | 50,510.00 | 38,010.00 | 91,543.00 | 104,846.50 | 118,150.00 |
| 68,975.00 | 120,550.00 | 51,575.00 | 39,075.00 | 93,197.50 | 106,873.75 | 120,550.00 |

2025 - சம்பளம் மாற்றியமைப்பு

01.04.2025 சம்பள படி நிலைகள் நிறைவேற்றுநர் சேவைகள் (SL I 2025)

| வகுப்பு III | | வகுப்பு II | | வகுப்பு I | |
|---|---|---|---|---|---|
| Present Basic Salary 31.03.2025 | New Basic Salary 01.04.2025 | Present Basic Salary 31.03.2025 | New Basic Salary 01.04.2025 | Present Basic Salary 31.03.2025 | New Basic Salary 01.04.2025 |
| 47,615.00 | 66,725.50 | 62,595.00 | 85,293.50 | 76,175.00 | 102,143.50 |
| 48,950.00 | 68,380.00 | 64,225.00 | 87,316.50 | 78,345.00 | 104,832.50 |
| 50,285.00 | 70,034.50 | 65,855.00 | 89,339.50 | 80,515.00 | 107,521.50 |
| 51,620.00 | 71,689.00 | 67,485.00 | 91,362.50 | 82,685.00 | 110,210.50 |
| 52,955.00 | 73,343.50 | 69,115.00 | 93,385.50 | 84,855.00 | 112,899.50 |
| 54,290.00 | 74,998.00 | 70,745.00 | 95,408.50 | 87,025.00 | 115,588.50 |
| 55,625.00 | 76,652.50 | 72,375.00 | 97,431.50 | 89,195.00 | 118,277.50 |
| 56,960.00 | 78,307.00 | 74,005.00 | 99,454.50 | 91,365.00 | 120,966.50 |
| 58,295.00 | 79,961.50 | 75,635.00 | 101,477.50 | 93,535.00 | 123,655.50 |
| 59,630.00 | 81,616.00 | 77,265.00 | 103,500.50 | 95,705.00 | 126,344.50 |
| 60,965.00 | 83,270.50 | 78,895.00 | 105,523.50 | 97,875.00 | 129,033.50 |
| 62,300.00 | 84,925.00 | 80,525.00 | 107,546.50 | 100,045.00 | 131,722.50 |
| 63,635.00 | 86,579.50 | 82,155.00 | 109,569.50 | 102,215.00 | 134,411.50 |
| 64,970.00 | 88,234.00 | 83,785.00 | 111,592.50 | 104,385.00 | 137,100.50 |
| 66,305.00 | 89,888.50 | 85,415.00 | 113,615.50 | 106,555.00 | 139,789.50 |
| 67,640.00 | 91,543.00 | 87,045.00 | 115,638.50 | 108,725.00 | 142,478.50 |
| 68,975.00 | 93,197.50 | 88,675.00 | 117,661.50 | 110,895.00 | 145,167.50 |
| 70,310.00 | 94,852.00 | 90,305.00 | 119,684.50 | 113,065.00 | 147,856.50 |
| 71,645.00 | 96,506.50 | 91,935.00 | 121,707.50 | 115,235.00 | 150,545.50 |
| 72,980.00 | 98,161.00 | 93,565.00 | 123,730.50 | 117,405.00 | 153,234.50 |
| 74,315.00 | 99,815.50 | 95,195.00 | 125,753.50 | 119,575.00 | 155,923.50 |
| 75,650.00 | 101,470.00 | 96,825.00 | 127,776.50 | 121,745.00 | 158,612.50 |
| 76,985.00 | 103,124.50 | 98,455.00 | 129,799.50 | 123,915.00 | 161,301.50 |
| 78,320.00 | 104,779.00 | 100,085.00 | 131,822.50 | 126,085.00 | 163,990.50 |
| 79,655.00 | 106,433.50 | 101,715.00 | 133,845.50 | 128,255.00 | 166,679.50 |
| 80,990.00 | 108,088.00 | 103,345.00 | 135,868.50 | 130,425.00 | 169,368.50 |
| [illegible] | 109,742.50 | 104,975.00 | 137,891.50 | 132,595.00 | 172,057.50 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# ஹவுதிகள் மீது தாக்குத

# ஆரம்பித்தது அமெரிக்

## 19 பேர் உயிரிழப்பு



(வோஷிங்டன்)

**செங்கடல் கப்பல் போக்குவரத்துக்கு எதிரான தாக்குதல்களுக்கு பதிலடியாக, ஏமனின் ஈரானுடன் இணைந்த ஹவுதிகள் மீது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பாரிய அளவிலான இராணுவத் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளார்.**

இந்தத் தாக்குதலில் குறைந்தது 19 பேர் உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹவுதிகளின் முக்கிய ஆதரவாளரான ஈரானை, அந்தக் குழுவிற்கான ஆதரவை உடனடியாக நிறுத்த வேண்டும் என்றும் ட்ரம்ப் எச்சரித்தார்.

இதனிடையே, ஹவுதிகளுக்கு எதிரான புதிய தாக்குதல்களானது பல நாட்கள் அல்லது வாரங்கள் நீடிக்கும் என்று வெள்ளை மாளிகை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்த ஜனவரியில் ட்ரம்ப் பதவியேற்றதிலிருந்து மத்திய கிழக்கில் அமெரிக்காவின் மிகப்பெரிய இராணுவ நடவடிக்கையாக இது அமைந்துள்ளது.

அமெரிக்கா தனது அணுசக்தித் திட்டம் தொடர்பாக டெஹ்ரான் மீது பொருளாதாரத் தடைகளை விதிக்கும் அழுத்தத்தை அதிகரித்து வரும் அதேவேளையில், ஈரானுடன் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க முயற்சிக்கும் நிலையில் ஹவுதிகளுக்கு எதிரான தாக்குதல் வந்துள்ளது.

இதேவேளை, ஏமன் தலைநகர் சனாவில் அமெரிக்கத் தாக்குதல்களில் குறைந்தது 13 பொதுமக்கள் உயிரிழந்ததாகவும், ஒன்பது பேர் காயமடைந்ததாக ஹவுதி நடத்தும் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

மேலும், சாதாவின் வடக்கு மாகாணத்தில் அமெரிக்கத் தாக்குதல்களில் நான்கு குழந்தைகள் மற்றும் ஒரு பெண் உட்பட ஆறு பேர் உயிரிழந்ததுடன், 11 பேர் காயமடைந்ததாகவும் ஹவுதி நடத்தும் தொலைக்காட்சி ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த தசாப்தத்தில் ஏமனின் பெரும்

பகுதி
மேந்
நவம்
குறி
தாக்கு
இ
சீர்கு
நடவ
வத்

## பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் வைத்தியசாலையில்



(டில்லி)

பிரபல இசையமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மான் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

திடீர் உடல்நலக் குறைவு காரணமாக அவர் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள தனியார் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள ஏ.ஆர்.ரஹ்மானுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருவதாகத் தகவல் கிடைத்துள்ளது. (நி-ஓ)

## பயணிகள் பேருந்து அருகே கு

# ஏழு பேர் மரணம், 35 பே

## பாகிஸ்தானில் சம்பவம்



(பாகிஸ்தான்)

வன்முறையால் பாதிக்கப்பட்ட பாகிஸ்தானின் பலுசிஸ்தான் பிராந்தியத்தில் நேற்று மற்றொரு துயரச் சம்பவம் பதிவாகியுள்ளது.

நுஷ்கி-தல்பண்டின் நெடுஞ்சாலையில் பயணிகள் பேருந்து அருகே இடம்பெற்ற குண்டுவெடிப்பில் குறைந்தது ஏழு பேர் உயிரிழந்துள்ளனர்.

மேலும், 35 பேர் காயமடைந்ததாக பாகிஸ்தானின் ஜியோ நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இருப்பினும், குண்டுவெடிப்பின் தன்மையையோ அல்லது அதன் காரணத்தையோ அதிகாரிகள் இன்னும் உறுதிப்படுத்தவில்லை.

குண்டுவெடிப்பு நடந்த உடனேயே காயமடைந்தவர்கள் உடனடியாக நுஷ்கி மருத்துவமனைக்கு மாற்றப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்களில் இருவர் படுகாயமடைந்துள்ளனர் என்று அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

நிலைமையைக் கையாள மிர் குல் கான் நசீர் போதனா மருத்துவமனையில் அவசரநிலை அறிவிக்கப்பட்டுள்ளதாக மருத்துவமனை நிர்வாகம் தெரிவித்துள்ளது.

பாதுகாப்புப் படையினர் அந்தப் பகுதியை சுற்றி வளைத்து சோதனைகளை மேற்

கொன
ப
மாவ
பக்து
தாக்கு
சில ந
நடந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதல்
# ிக்கா!



பகுதியைக் கட்டுப்பாட்டில் எடுத்த ஆயுத மேந்திய இயக்கமான ஹவுதிகள், 2023 நவம்பர் முதல் கப்பல் போக்கு வரத்தை குறிவைத்து 100இற்கும் மேற்பட்ட தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

இது உலகளாவிய வர்த்தகத்தை சீர்குலைத்ததுடன், அதிகளவிலான பதில் நடவடிக்கையில் அமெரிக்க இராணு வத்தையும் ஈடுபடுத்தியுள்ளது. (நி-8)

# அமெரிக்காவில் சூறாவளி!

- 34 பேர் உயிரிழப்பு
- சுமார் 2 லட்சம் வீடுகளுக்கு மின்துண்டிப்பு
- அவசரகால நிலை அறிவிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஏற்பட்டுள்ள சுழிக்காற்று மற்றும் புயல் காரணமாக இதுவரையில் 34 பேர் வரையில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவின் பல்வேறு பகுதிகளைச் சுழிக்காற்று மற்றும் புயல் தாக்கி வருகிறது.

இதன் காரணமாகப் பெருமளவான குடியிருப்புக்கள் சேதமடைந்துள்ளதாகச் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மிசோரியில் சுமார் ஒரு லட்சம் பேர் மின்சாரமின்றி இருப்பதாகக் கண்காணிப்பு சேவை தெரிவித்துள்ளது.

அத்துடன், ஆர்கன்சஸ், இந்தியானா, டெக்சாஸ் மற்றும் மிசிசிப்பி ஆகிய மாநிலங்களில் 10,000 இற்கும் மேற்பட்டவர்களும், மிச்சிகனில் 70,000 பேரும் மின்சாரத்தை இழந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இதனிடையே, சீரற்ற வானிலை காரணமாக ஜோர்ஜியாவில் அவசரகால நிலை அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மிகுந்த அவதானத்துடனும் விழிப்புணர்வுடன் இருக்குமாறும் ஜோர்ஜியாவின் ஆளுநர் தெரிவித்துள்ளார். (நி-8)



# க குண்டுவெடிப்பு
# 5 பேர் காயம்



கொண்டு வருகின்றனர்.

பலுசிஸ்தானில் உள்ள போலான் மாவட்டத்தின் முஷ்காஃப் பகுதியில், கைபே பக்துன்க்வாவுடன் சேர்ந்து பயங்கரவாதத் தாக்குதல்களின் தாக்குதலை எதிர்கொண்ட சில நாட்களுக்குப் பின்னர் இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

(நி-8)

# வடகொரியாவின் அணு ஆயுதத்தை குறைக்க முடிந்தால் அது பெரும் சாதனையே
## ட்ரம்ப் தெரிவிப்பு



(வோஷிங்டன்)

வட கொரிய ஜனாதிபதியுடன் இன்று வரை நல்ல நட்புறவில் இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்தார்.

நேட்டோ அமைப்பின் பொதுச் செயலாளர் மார்க் ட்ரூடே, அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை அண்மையில் அவரது ஓவல் அலுவலகத்தில் சந்தித்து பேசினார்.

பின்னர் இருவரும் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்த போது, வடகொரியா ஜனாதிபதி கிம் ஜாங் உன் குறித்து மார்க் ட்ரூடே எழுப்பிய கேள்விக்கு ட்ரம்ப் பதிலளித்தார்.

ட்ரம்ப் மேலும் தெரிவிக்கையில், முதல் முறையாக அமெரிக்க ஜனாதிபதியாக நான் பதவி வகித்த போது வட கொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னை பல முறை சந்தித்து உச்சி மாநாடு நடத்தியுள்ளேன். வட கொரியா அணுசக்தியை கொண்ட நாடு தான். அவருடன் இன்று வரை நான் நல்ல நட்புறவில் உள்ளேன் எனத் தெரிவித்தார்.

அணு ஆயுதக் குறைப்பு குறித்து அவரிடம் மீண்டும் பேச்சுவார்த்தையை தொடர்வீர்களா என மார்க் ரூட்டே கேள்வி எழுப்பிய போது, வடகொரியாவிடம் நிறைய அணு ஆயுதங்கள் உள்ளது போன்றே பிற நாடுகளிடமும் உள்ளது. இருப்பினும் வடகொரியாவின் அணு ஆயுத எண்ணிக்கையைக் குறைக்க முடிந்தால் அது ஒரு பெரிய சாதனையாக இருக்கும். என கருதுகிறேன் என ட்ரம்ப் மேலும் தெரிவித்தார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிலுக்காக வெளிநாடு செல்வோருக்கான அறிவுறுத்தல்



(கொழும்பு)

வேலைவாய்ப்புக்காக தனியார் முகவர்களின் ஊடாக வெளிநாடு செல்லும்போது 1989 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பை ஏற்படுத்தி குறித்த முகவர் தொடர்பில் அறிந்து கொள்ள முடியும் என வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

வேலைவாய்ப்புக்காக வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி நிதி மோசடியில் ஈடுபடும் நபர்கள் தொடர்பில் அண்மையில் நடைபெற்ற வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சார் ஆலோசனைக் குழுவில் பங்குபற்றிய பாராளுமன்ற உறுப்பினர்கள் கேள்வியெழுப்பினர்.

இதற்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் விஜித ஹேரத் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தால் அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிறுவனங்கள் மற்றும் கட்டணங்கள் தொடர்பான அனைத்துத் தகவல்களையும் பணியகத்தின் இணையத்தளத்தில் அறிந்துகொள்ள முடியும் என அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு தரப்பினரும் அங்கீகரிக்கப்பட்ட தொகையை விட அதிகமாகப் பெற்றுக்கொண்டால் அல்லது அனுமதிப்பத்திரம் இன்றி ஏதேனும் செயற்பாடுகளில் ஈடுபட்டால் பணியகத்தில் முறைப்பாடு செய்ய முடியும் எனவும் அதிகாரிகளினால் இதன்போது தெரிவிக்கப்பட்டது. (நி-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 250 | 150-200 | 200 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 160 | 200 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 500 | 550-600 | 200 |
| தக்காளி | 200 | 200 | 150 | 150-180 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 250 | 200 | 200 | 200 |
| கோவா | 300 | 250 | 400 | 240 | 400 |
| கரட் | 900 | 650-850 | 1000 | 800 | 900 |
| பூசணி | 120 | 140 | 150 | 80-100 | 200 |
| புடோல் | 150 | 150 | 150 | 100-140 | 200 |
| வாழைக்காய் | 160 | 100 | 120 | 80-100 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 140-250 | 300 | 150-200 | 200 |
| பெரிய வெங்காயம் | 180 | 150 | 180 | 140 | 100-160 |
| பாகற்காய் | 500 | 450 | 500 | 400-500 | 400 |
| வெண்டக்காய் | 300 | 300 | 200 | 250-300 | 400 |
| கருணைக் கிழங்கு | 180 | 260 | 150 | 150 | 200 |
| பயற்றங்காய் | 350 | 400 | 300 | 300-350 | 400 |
| லீக்ஸ் | 400 | 350 | 300 | 250 | 400 |
| பீற்றூட் | 180 | 160 | 150 | 150 | 250 |
| கறிமிளகாய் | 800 | 500 | 400 | 400-500 | 600 |
| முருங்கைக்காய் | -- | 3500 | 1500 | 2500 | 2500 |
| போஞ்சி | 400 | 400 | 300 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 150 | 100 | 160 |
| கீரை – 1 பிடி | 120 | 140 | 150 | 70-80 | 150 |
| தேசிக்காய் | 200 | 250 | 100 | 150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 250 | 200 | 150-250 | 200-260 |
| இராசவள்ளி | 600 | 450 | 500 | 400 | 450 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 150 | 60-150 | 200 |
| முள்ளங்கி | 100 | 200 | 150 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 80 | 65 | 80 | 50 | 100 |
| ஈரப்பலா | 100 | 120 | 50 | 100 | 250 |

## இன்று ஒரு தகவல் 341



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# முதல் உதவி

ஒரு ஆசாமி வேகமாக ஓடிக்கொண்டிருந்தார். ஏன் இப்படி ஓடுகின்றாய் என்று கேட்டார் இன்னொருவர். அங்கே ஒரு ஆள் அடிபட்டுக்கிடக்கிறான். அதைப் பார்த்தேன் உடனே ஓடினேன் என்றார்.

எங்கே என்று கேட்டார். வைத்தியசாலைக்கு என்றான். ஒரு ஆள் அடிபட்டுக்கிடப்பதைப் பார்த்தால் உடனடியாக நாம் செய்ய வேண்டியது முதல் உதவி. அதன்பின் தான் வைத்தியசாலை.

இன்றைக்கு விபத்து என்பது சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்கிறது. வாகனவிபத்து, வெடி குண்டு விபத்து, தீ விபத்து, கட்டடம் சரிவது பூகம்பம் இப்படி நிறைய நடக்கிறது.

ஒரு விபத்தைப் பார்த்து விட்டால் எங்களிலே பல பேர் நமக்கு என்னத்திற்கு வம்பு என்று ஒதுங்கிப் போய்விடுவதும் உண்டு. சிலபேர் துணிந்து கொண்டு போய் உதவி செய்வதும் உண்டு. அப்படி செய்ய நினைக்கிறவர்களுக்கு உபயோகப்படுகின்ற தகவல் இது.

விபத்திலே காயமடைகின்றவர்களை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம்.

முதல் வகை கொஞ்சம் சீரியஸ் ஆனளது. உயிருக்கு உடனே ஆபத்து தரக் கூடியது. மூளைக்காயம், முகம், கழுத்துக் காயங்கள், இருதயம் நுரையீரல் காயங்கள், வயிற்றின் உள்ளுறுப்புக்காயங்கள் அதிகபடியான இரத்தப் போக்கு, இதனாலேயெல்லாம் பாதிக்கப்பட்டிருந்தால் அது முதல் வகை என்று நாம் மனதிற்குள்ளே நினைத்துக் கொள்ள வேண்டும். தாமதப் படுத்தாமல் வைத்தியசாலைக்கு கொண்டு போய் விட வேண்டும். இப்படி கொஞ்சம் எச்சரிக்கையாக நடந்து கொண்டால் அவர்களிலே பல பேரைக் காப்பாற்றி விடலாம்.

இரண்டாவது வகை எப்படி என்றால் முதலுதவி கிடைத்தால் உயிர் பிழைக்கக் கூடிய மார்புக்காயங்கள், கை, கால் எலும்பு முறிவு, இடுப்பு முதுகொலும்புக் காயங்கள், சீரான இரத்த சேதம் இப்படிப்பட்டவர்களை இரண்டாவது வகையாகப் பிரித்துக் கொள்ளவேண்டும்.

ஆபத்து அல்லாத சிராப்புக்கள், சிறு காயங்கள், இரத்த உறைவுகள் போன்றவற்றினாலே பாதிக்கப்பட்டவர்கள் மூன்றாவது வகை.

ஒருவர் தலையிலே அடிபட்டு சுய நினைவு இல்லாமல் போய்விட்டார் என்று வைத்துக் கொள்ளுங்கள். அவருக்கு வாந்தி வருவதனாலே புரையேறி மூச்சடைப்பு உண்டாகும். இப்படி ஆகாமல் இருக்க தலையை ஒரு பக்கமாக சாய்த்து வைத்துக் கொள்ளலாம்.

நாடித்துடிப்பையும், இதயத் துடிப்பையும் தொட்டுப்பார்க்க வேண்டும். அது குறைந்திருந்தாலும் சரி நின்றிருந்தாலும் சரி. அவர் மார்பை நிமிடத்துக்கு 80 தடவை உள்ளங்கையாலே அழுத்தி இதயத் துடிப்பை மீட்பதற்கு உதவவேண்டும்.

கழுத்திலே காயம் பட்டாலும் ஆபத்து அதிகம். கழுத்திற்கு அடியிலே ஒரு துண்டை மடித்து வைக்கலாம். இரண்டு பக்கமும் சிறு தலையணை அல்லது துணி மடிப்புக்களை வைத்து கழுத்து அதிகமாக அசையமால் பார்த்து கொள்ள வேண்டும்.

முதுகு எலும்பு முறிஞ்சிருக்குமோ என்ற சந்தேகம் வந்தால் அவரை அதிகமாக அசையவிடக் கூடாது. அதிகமாக அசைந்தால் தண்டு வடத்திலே பாதிப்பு ஏற்பட்டு கை கால் விளங்காமல் போய்விடும்.

அவரை ஒரு கணமான போர்வை இல்லையென்றால் பாயிலே படுக்க வைத்து நான்கு பேர் மெதுவாகத் தூக்கி மருத்துவ உதவிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

கை எலும்பு முறிந்தால் முறிந்த பாகத்தை உடலோடு சேர்ந்து அசையாமல் கட்டி விடலாம். முறிந்த பாகம் தொங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் வீக்கம் ஏற்படாமல் இருக்கும்.

வெட்டுக்காயம், குண்டடிபட்ட காயம் இதிலேயெல்லாம் இரத்தப் போக்கு அதிகமாக இருக்கும். இரத்தம் வெளியேற வெளியேற ஆபத்து அதிகம். சுத்தமான துணியை பல மடிப்புக்களாக மடித்து காயத்தின் மேலே வைத்து அழுத்தமாக ஒரு பத்து நிமிடம் பிடிக்க வேண்டும். இரத்தம் நின்ற உடனே காயத்திற்கு கட்டுப்போடலாம். சில சமயம் காயம் பட்ட இடத்தை உயரமாக தூக்கிப்பிடித்தால் தான் இரத்தக்கசிவு நிற்கும்.

இந்த விபரங்களையெல்லாம் கொஞ்சம் காதிலே வாங்கி வைத்தோம் என்றால் சில சமயத்திலே உதவும். ஏன் என்றால் இந்தக் காலத்திலே விபத்து எந்த ரூபத்திலே வரும் என்று ஊகிக்க முடியாது சேர்.


நண்பன் ஒருவன் நேற்று என் கண்முன்னாலே ஒரு விபத்து நடந்தது என்றான். என்ன என்று விசாரித்தேன். ஒரு பேருந்தில் வந்து கொண்டிருந்தேன், அந்தப் பேருந்தின் பின்பக்கமாக படியோரமாக நின்று கொண்டிருந்த ஒருவன் ரோட்டிலே விழுந்து விட்டான். டிரைவர் அதைக் கவனிக்கவில்லை. நிறுத்தாமல் அவர் பாட்டுக்குப் போறார் என்றார்.

கண்டக்ரர் ஒரு விசில் கொடுத்து பேருந்தை நிறுத்த வேண்டியது தானே என்றேன். அது தான் சேர் முடியாமல் போய்விட்டது என்றான். ஏன் என்று கேட்டேன் தவறிக் கீழே விழுந்ததே அவர் தான் சேர் என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவையாறு, புழுதியாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டம்

## பார்வையிட்ட ஆளுநர்



(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் திருவையாற்றில் முன்னெடுக்கப்படும் ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தையும், புழுதியாற்றில் கைவிடப்பட்டுள்ள ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தையும் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.


திருவையாறு ஏற்று நீர்ப்பாசனத் திட்டத்தின் கீழ் 500 ஏக்கரில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளப்படுவதாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார். அங்கு சூரியமின்கலம் (சோலர்) மூலமான மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு வழங்கப்படுவதால் ஏற்று நீர்ப்பாசனத்துக்காக விவசாயிகளிடமிருந்து குறைவான தொகையே அறவிடப்படுவதாக ஆளுநருக்கு சுட்டிக்காட்டப்பட்டது. இதன்மூலம் 30 மில்லியன் ரூபா வரையில் இலாபம் பெறப்பட்டுள்ளதாகவும் அதனைப் பயன்படுத்தி மேலதிக சூரியமின்கலம் மூலமான மின்சார உற்பத்தியை அதிகரித்தால் விவசாயிகளிடமிருந்து மாதாந்தம் பெறப்படும் தொகையைக் குறைக்க முடியும் எனவும் கிளிநொச்சி பதில் மாவட்டச் செயலர் இதன்போது ஆளுநருக்குத் தெரியப்படுத்தினார்.

இதன் பின்னர் புழுதியாற்றுக்குளம் மற்றும் புழுதியாற்று ஏற்று நீர்பாசனத் திட்டத்தை ஆளுநர் சென்று பார்வையிட்டார். 2015ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தத் திட்டம் 2018ஆம் ஆண்டு கைவிடப்பட்டதாகவும், 70 ஏக்கரில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் விவசாயிகள் குறிப்பிட்டனர்.

தற்போது இந்தத் திட்டத்தை மீள ஆரம்பிப்பதற்கு 70 மில்லியன் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது. சூரியமின்கலம் மூலமான மின் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு இலங்கை மின்சார சபைக்கு அதனை வழங்குவ்தன் மூலம் விவசாயிகளிடமிருந்து குறைந்த தொகையைப் பெற்று இதனைச் செயற்படுத்த முடியும் என நீர்பாசனப் பொறியியலாளர் ஆளுநருக்கு விளக்கமளித்தார்.

இதன்போது குளத்தின் அணைக்கட்டு புனரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் விவசாயிகள் ஆளுநருக்கு தெரியப்படுத்தினர். கமநல சேவைகள் திணைக்களத்திடமிருந்து குளத்தை நீர்ப்பாசனத் திணைக்களத்துக்கு உள்வாங்குவதற்கும் ஏனைய தொடர் செயற்பாடுகளையும் முன்னெடுப்பதாக ஆளுநர் இதன் போது குறிப்பிட்டார். (6-8)

# பிறப்புச் சான்றிதழ் பதிவு 46 பயனாளிகள் பயனடைவு



(யாழ்ப்பாணம்)

இதுவரை பிறப்புச் சான்றிதழை பதிவு செய்யாத சிறுவர்கள் மற்றும் ஏனையவர்களுக்கான நடமாடும் சேவையானது யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் ம.பிரதீபன் தலைமையில் கடந்த வெள்ளிக்கிழமை மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

குறித்த நடமாடும் சேவையில் காலங்கடந்த பிறப்பு பதிவு 30 சிறுவர்களுக்கும் உத்தேச வயதுப் பத்திரம் 5 பேருக்கும், பிறப்புச் சான்றிதழ் திருத்தம் 7 பேருக்கும், இறப்பு பதிவு 4 பேருக்குமாக 46 பயனாளிகள் பயனடைந்தார்கள்.

இந் நிகழ்வில், வடக்கு மாகாண பிரதிப் பதிவாளர் நாயகம் பி.பிரபாகர், மாவட்ட உதவிப்பதிவாளர் நாயகம் பி.தாரகா ,மாவட்ட மற்றும் பிரதேச செயலக மேலதிக பதிவாளர்கள் ,பிரதேச சிறுவர் மேம்பாடு உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் மற்றும் சிறுவர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டிருந்தார்கள்.

மேலும் அடுத்த நடமாடும் சேவையினை எதிர்வரும் 18.06.2025 ஆம் திகதி நடாத்த தீர்மானித்துள்ளதாகவும் அதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் உரிய தரப்பினருக்கும் மாவட்ட அரசாங்க அதிபர் அறிவுறுத்தியிருந்தார். (6-8-33)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3315


### தருண்




### அபிநயா




### தனுஜா




### சர்மிலா




### அக்ஷயா




### விதுஷன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 726





"அக்கா! வானதியைக் கவனித்துக் கொள்ள நீ இருக்கும் போது கவலை என்ன? சௌக்கியமா என்று நான் விசாரிப்பது தான் என்ன?"

"ரொம்ப சரி, சற்று வாயை மூடிக்கொண்டிரு! வானதி! இங்கே வா! உன்னை இளவரசன் நன்றாய்ப் பார்க்க வேண்டுமாம்!" என்றாள் குந்தவை.

வானதி அருகில் வந்தாள். இளவரசனைப் பார்த்தும் பாராமலும் நின்றுகொண்டு, "அக்கா! எதற்காகக் கற்பனை செய்து கூறுகிறீர்கள்! தங்கள் தம்பி என்னைப் பார்க்க விரும்பவில்லை. அவர் பார்வையெல்லாம் அதோ ஓடையில் இருக்கும் ஓடத்தின் மேலேயே இருக்கிறது. அவசரமாகத் திரும்பிப் போக வேண்டும் போலிருக்கிறதே!" என்று பட்டுப் போன்ற மிருதுவான குரலில் கூறினாள். ஓடத்தில் இருந்த பூங்குழலியை நினைத்துக்கொண்டு ஓடத்தைக் குறிப்பிட்டாள் போலும்!

இளவரசன் நகைத்துக் கொண்டே "அக்கா! உன் தோழிக்குப் பேசத் தெரிகிறதே. நம் குடும்பத்தைச் சேர்ந்த ஊமைகளுடன் இவளும் ஒரு ஊமையோ என்று பயந்து போனேன்!" என்றான்.

"அக்கா! இவரைப் பார்த்தால் எனக்குப் பேச வருகிறதில்லை. எனக்கே நான் ஊமையாய்ப் போய்விட்டேனோ என்று பயம் உண்டாகிறது" என்றாள் வானதி.

"அது ரொம்ப நல்லது. கோடிக்கரையில் ஒருவன் இருக்கிறான் பூங்குழலியின் தமையன். அவன் மற்றவர்களிடம் ஒருவாறு தெத்தித் தெத்திப் பேசுகிறான். ஆனால் அவன் மனைவியைக் கண்டால் ஊமையாகி விடுகிறான். அதனால் அவனை அவன் வீட்டார் ஊமை என்றே வைத்து விட்டார்கள்" என்றான் இளவரசன்.

"இந்தக் கொடும்பாளூர்ப் பெண் கொஞ்சம் அந்த மாதிரி தான். முன்னேயெல்லாம் இவளைச் சற்று நேரம் பேசாமல் சும்மா இருக்கச் சொன்னால் இவளால் முடியவே முடியாது. பேச ஆரம்பித்தால் நிறுத்தவே மாட்டாள். நீ முதன் முதலில் இலங்கைக்குப் போனாயே, அது முதல் இவளுடைய பேச்சுக் குறைந்துவிட்டது. தனியாகத் தனியாகப் போய் உட்கார்ந்து கொண்டு எதையோ எண்ணிக் கொண்டிருக்கிறாள். அது போனால் போகட்டும், வானதி! அன்று இரவு தஞ்சை அரண்மனையில் நடந்ததையெல்லாம் இளவரசனுக்கு விவரமாகச் சொல்லு" என்றாள் குந்தவை.

"கொடும்பாளூர் இளவரசி உட்கார்ந்து கொண்டு சொல்லட்டும் அக்கா! இவள் இத்தனை நேரம் நிற்பதைப் பார்த்தால் இவளுடைய பெரிய தந்தை உருகிப் போய் விடுவார். தென்திசைச் சேனாதிபதி என்னைப் பார்க்கும் போதெல்லாம் இவளைப் பற்றி விசாரிப்பார். நீயோ இவளைப் பற்றி ஒன்றுமே சொல்லி அனுப்புவதில்லை. ஆகையால், நான் அவருக்குப் பதில் சொல்ல முடியாமல் திண்டாடுவேன்" என்றான் இளவரசன்.

"வாணர் குலத்து வீரரிடம் இவளைப்பற்றி விவரமாய்ச் சொல்லி அனுப்பினேனே, அவர் ஒன்றும் உன்னிடம் சொல்லவில்லையா?"

"அவர் சொல்லித்தான் இருப்பார், அக்கா! இவர் காதில் ஒன்றும் விழுந்திராது. இவருக்கு எத்தனையோ ஞாபகம்!" என்றாள் வானதி.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## இவ்வளவு குட்டியா இருக்கியே

ஒரு அழகான கிராமம். அங்கு அழகான நீரோடை இருந்தது. அந்த ஊரே பச்சை பசேலென இருக்க, நீரோடையின் ஓரமாக பின்னி என்ற மரம் வளர்ந்து செழிப்பாக இருந்தது. பார்க்கவே கொப்பும் குலையுமாக பரந்து விரிந்து பெரிதாக இருந்தது.



அந்த வழியாக மக்கள் செல்லும்போது ஒரு முறையாவது பின்னியின் அருகில் நின்று ஓய்வெடுக்காமல் செல்லமாட்டார்கள். அதன் அருகிலே சில்லி என்று இன்னொரு மரம் இருந்தது.

அது பார்க்க கொஞ்சம் ஒல்லியாக, குட்டியாக இருந்தது. மக்களும் சில்லியைப் பெரிதாகக்கண்டு கொள்ளவில்லை. 'அதற்காக சில்லி ஒருநாளும் வருத்தப்பட்டது இல்லை. ஆனால் பின்னி மக்கள் தன்னை தான் பெரிதாகப் பார்ப்பதால் பெருமையின் உச்சத்திற்கே சென்றது. அதுமட்டுமில்லாமல் சில்லியை வம்பிழுக்கவும் ஆரம்பித்தது. நீ என் இவ்வளவு குட்டியாக இருக்கிறாய் பாத்தியா நீ எவ்வளவு மெலிந்து இருக்கிறாய் என நீயே அந்த நீரோடையில் பாருனசொல்லிக் கேலி செய்தது. இதை மக்கள் பார்த்தாலும் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர்களுக்கு சில்லி, பின்னி இரண்டு பேரும் நிழல் கொடுத்தால் போதும் என்பது போல கண்டுகொள்ளாமல் இருந்தார்கள். பின்னி, சில்லியைக் கேலி செய்வதை நிறுத்துவதாகத் தெரியவில்லை. ஒரு கட்டத்தில் சில்லி மனமுடைந்து கதறி அழுதது.

அன்றைக்கு திடீரென பலத்த புயல் காற்றுடன் மழை பெய்ய தொடங்கியது. பின்னி நான் ரொம்பவே பெரியவன் உறுதியானவன். தப்பித்துவிடுவேன். ஆனால் உன்னை பார்த்தாயா மிகவும் குட்டியாக இருக்கிறாய், முடிந்தால் உயிரோடு இருந்தால் பார்க்கலாம் என சத்தமாக சிரித்தது. புயல் காற்று, சூறாவளியாக மாறியது. சில்லி பிழைப்பேனா என்பது போல காற்றில் இங்கும் அங்கும் ஆடியது.

ஆனால் பின்னி ஒரு இடத்தில் ஆடாமல் அசையாமல் இருந்தது. ஒரு வேகமான காற்று கொஞ்சம் பலத்துடன் வீச, பின்னியை வேரோடு பிடுங்கி, நீரோடையில் வீசியது. ஆனால் சில்லி அதே காற்றில் அங்கும் இங்கும் ஆடியது. மக்கள் யாருமே வெளியில் வராததால் இரவெல்லாம் என்ன நடந்தது என்று தெரியவில்லை. காலையில் காற்று, மழை அடங்கியதும் வெளியில் வந்து பார்த்தால் பின்னி நீரோடையில் விழுந்து கிடந்தது. பலரும் அதை பார்த்து அதிர்ச்சி அடைந்தார்கள். சில்லி உயிர் பிழைத்த நிம்மதியில் இருந்தது.

அப்போது தான் மக்களுக்கு புரிந்தது அமைதியாகவும், வளைந்து நெளிந்து கொடுத்ததாலும் சில்லி உயிர் பிழைத்தது.

அதே போல பின்னியின் ஆணவமும், பிடிவாதமும் அதை வேரோடு சாய்க்க காரணம் என்றும் எண்ணினார்கள். ஆகவே குழந்தைகளே வளைந்து கொடுக்க வேண்டிய நேரங்களில் கொடுப்பதால் அது நமக்கு நல்லதாக அமைய நிறையவே வாய்ப்பிருக்கிறது என்பதை புரிந்து நடந்து கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசன் எவ்வழியோ குடிகளும் அவ்வழியே.

- அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்கியது அறிவீரோ!

மனுநீதிச் சோழ மன்னனின் அரண்மனைக்கு தாய்ப் பசுவொன்று வேகமாக வருகிறது.

பசுவின் கண்களிலிருந்து கண்ணீர் ஒடுகிறது.

பெற்ற வயிற்றை எக்கி தன் வேதனையின் வெதும்பலை வெளிப்படுத்தும் அந்தப் பசு, ஆராய்ச்சி மணியின் சங்கிலியை தன் கொம்பால் இழுத்து அடிக்கிறது.

அந்தோ! மனுநீதிச் சோழமன்னனின் அரண்மனை கலங்கிற்று.

மக்கள் தம் குறைகளை மன்னனுக்குத் தெரியப்படுத்தும் பொருட்டு வைக்கப்பட்ட ஆராய்ச்சி மணி இதுகாறும் ஒலித்ததில்லை. அந்தளவுக்கு மனுநீதிச் சோழ மன்னனின் ஆட்சியில் எந்தக் குறையும் இருந்ததில்லை.

ஆனால் இன்று ஆராய்ச்சி மணி ஒலிக்கிறது. மன்னன் தினுக்குற்றான். மந்திரியை அழைத்து நிலைமையைக் கூறுக! என்கிறான்.

மந்திரி செப்புகிறான் மன்னா! நின் புதல்வன் வீதிவிடங்கன் தேரைச் செலுத்திச் செல்கையில், பசுவின் கன்று தேர்க்கால் இடைப் புகுந்து இறந்து போயிற்று. அந்த வேதனையைத் தாங்க முடியாத தாய்ப்பசு மன்னர் பெருமானாகிய தங்களிடம் முறையிடும் பொருட்டு ஆராய்ச்சி மணியை இழுத்து அடித்தது என்றார்.

தாங்க முடியாத வேதனையில் மன்னன் மனுநீதிச் சோழன் தவிக்கிறான்.

மந்திரியைப் பார்த்து, கன்றை இழந்த பசுவுக்கு நீதி வழங்க வேண்டும். குற்றம் இழைத்தவனுக்கு யாது? தண்டனை எனக் கேட்க; பசுவின் கன்று எங்ஙனம் தேர்க்காலில் நசியுண்டு இறந்ததோ அதுபோல குற்றம் இழைத்தவர் தண்டனை பெறவேண்டும் என்கிறார் மந்திரி.

மன்னன் மனுநீதிச் சோழன் தேரில் ஏறுகிறான். தன் மகன் வீதிவிடங்கனை தேரோடும் வீதியில் கிடத்துமாறு கட்டளையிட, அவ்வாறே காரியம் ஆகிறது.

தானே தேரைச் செலுத்தி தேர்க்காலால் தன் பிள்ளை வீதிவிடங்கனைக் கொல்கிறான்.

மனுநீதிச் சோழ மன்னனின் நீதியைப் போற்றித் தேவர்கள் பூமாரி பொழிய, கோன் கன்றும் ஆன் கன்றும் உயிர்த்தெழுகின்றன.

பெரியபுராணம் போற்றுகின்ற மனுநீதிச் சோழ மன்னனை அறிந்தால், பட்டலந்த வதை முகாம் அறிக்கை போல தென்னிலங்கையில், வன்னியில், யாழ்ப்பாணத்தில், ஏன்? தமிழர் வாழ்விடம் முழுவதும் நடந்த இனக் கலவரங்கள், யுத்தங்கள், காணாமல் ஆக்கப்பட்ட கொடூரங்கள், சிறைகளில் நடந்த சித்திரவதைகள் இவை யாவும் குறித்து பாராளுமன்றத்தில் பிரஸ்தாபிப்பதும் அந்தக் குற்றத்தை இழைத்த முன்னாள் ஆட்சியாளர்கள் மீது சட்டநடவடிக்கை எடுப்பதும் கட்டாயமான தல்லவா.

அதைச் செய்யாமல் பட்டலந்தவோடு மட்டும் நிற்பது எந்தவகையில் நீதியாகும்.

ஆக, இதுபற்றி அநுர குமார திஸாநாயக்கவின் அரசாங்கம் சிந்திக்க வேண்டும்.

# கணித, விஞ்ஞானத் துறையில் தமிழ் மாணவர்கள் குறைவு

## பேராசிரியர் சசிகேஷ் சுட்டிக்காட்டு

(தெல்லிப்பளை)

கணித, விஞ்ஞானத் துறையில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கிறது என யாழ். பல்கலைக்கழக இரசாயனவியல் துறைப் பேராசிரியர் க.சசிகேஷ் தெரிவித்தார்.

சட்டத்தரணி செல்வஸ்கந்தனால் மாகாண மட்டத்தில் நடத்தப்பட்ட மகாஜனன் கணித, விஞ்ஞான திறன்காண் போட்டிப்பரீட்சையில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை (15) தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் பாவலர் துரையப்பாப்பிள்ளை மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கணித, விஞ்ஞானத் துறையில் தமிழ் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்கிறது. இது கவலைக்குரிய விடயமாக உள்ளது. கணித, விஞ்ஞானத் துறையை மாணவர்கள் தெரிவு செய்வது குறைவதாகக் குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகிறது. சில தவறான கண்ணோட்டமோ, தவறான புரிதலோ என்பது புரியாதுள்ளது.

கணித, விஞ்ஞானத் துறைகளை விட கலைத்துறையில் வேலைகளைப் பெற்றுக்கொள்ளலாம் என்ற நிலையும் காணப்படுகிறது. ஆனால் கணித, விஞ்ஞானத்துறையில் வேலை இல்லை என்று கூறுவதிற்கில்லை.

படித்து முடித்த கையோடு ஆகக் குறைந்தது ஒரு வருடம் காத்திருக்க வேண்டிவரும். அதற்குள் உள்நாட்டிலோ, வெளிநாட்டிலோ வேலை கிடைத்துவிடும் அல்லது மேற்படிப்புக்குச் செல்லலாம்.

கணித, விஞ்ஞானத் துறைக்கு தற்போதும் ஆசிரியர்கள் பற்றாக் குறையாகவே உள்ளது. மாணவர்களை பெற்றோர், ஆசிரியர்கள் சரியான முறையில் தெளிவுபடுத்தல்களை, தயார்படுத்தல்களை செய்தால் அந்தத் துறையில் மாணவர்களை முன்னேற்றமடையச் செய்யலாம்.

ஏனைய துறையைப் போல் வேலையில்லாப் போராட்டம், வேலையில்லாப் பிரச்சினைக்குள் சிக்குப் படத்தேவையில்லை என்பது எனது கருத்தாகும்.

கணித, விஞ்ஞானத் துறையின் முக்கியத் துவத்தை உணர்ந்தே சட்டத்தரணி இ.செல்வஸ்கந்தனால் மாகாண மட்டத்தில் மகாஜனன் கணித, விஞ்ஞானத் திறன்காண் போட்டிப் பரீட்சையை நீண்டகாலமாக நடாத்திவருகிறார். அரசாங்கமும் இந்தத் துறையை ஊக்கப்படுத்திவருகிறது.

தற்போதைய சூழலில் குறிப்பாக 2009 ஆண்டு யுத்தத்திற்கு பின்னரான சூழலில் யாழ். பல்கலைக்கழகத்தில் கணித, விஞ்ஞானத்துறையில் தென்னிலங்கையைச் சேர்ந்த 65 சதவீதமான மாணவர்கள் கல்வி கற்கிறார்கள். தமிழ் மாணவர்களின் வீதம் குறைந்துகொண்டு செல்கிறது என்றார். (ந-7)

# கொலன்னாவவில் உள்ள எரிபொருள் குழாய் சேதம்

(கொழும்பு)

கொழும்புத் துறைமுகத்தையும் கொலன்னாவவில் உள்ள இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சேமிப்பு முனையத்தையும் இணைக்கும் எரிபொருள் குழாயில் சேதம் ஏற்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) நேற்று ஞாயிற்றுக்கிழமை (16) தெரிவித்துள்ளது.

எரிபொருள் வழங்கும் இரண்டு குழாய்களில் ஒன்றில் சேதம் ஏற்பட்டுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

ஏனைய குழாயைப் பயன்படுத்தி போதுமான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் கைது

## கிளிநொச்சியில் சம்பவம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சிப் பகுதியில் தொடர் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த இருவர் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் 15 பவுணுக்கும் அதிகமான தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளதுடன் 6 மோட்டார் சைக்கிள்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

மேலும் குறித்த சந்தேக நபர்கள் கிளிநொச்சி மாங்குளம், முறிகண்டி, வட்டக்கச்சி ஏனைய இடங்களில் திருட்டில் ஈடுபட்டிருந்தமையும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதனையடுத்து இரு சந்தேக நபர்களையும் நீதிமன்றில் முற்படுத்திய வேளை இருவரையும் தடுத்து வைத்து விசாரிக்க நீதவான் அனுமதி வழங்கியுள்ளார். (ந-7,316)

# விமானத்தில் மதுபோதை அத்துமீறிய பயணி கைது

(கொழும்பு)

சிங்கப்பூரிலிருந்து கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வந்து கொண்டிருந்த விமானத்தில் இரண்டு பெண் விமானப் பணிப் பெண்களை பாலியல் ரீதியாக துன்புறுத்த முயன்ற பயணி ஒருவர் விமான நிலையப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் அத்துருகிரிய பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் எனத் தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் சனிக்கிழமை (15) இரவு 10.00 மணியளவில் சிங்கப்பூரிலிருந்து ஸ்ரீ லங்கன் ஏர்லைன்ஸ் விமானம் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது.

விமானம் நடுவானில் பறந்து கொண்டிருந்த போது அதிக மது போதையில் இருந்த குறித்த நபர் இரண்டு பெண் விமானப் பணிப் பெண்களைப் பாலியல் ரீதியாகத் துன்புறுத்த முயற்சி செய்துள்ளார்.

இதன்போது விமான பணிப்பெண்கள் சம்பவத்தை விமானிக்குத் தெரிவித்ததை அடுத்து, விமானக் கட்டுப்பாட்டு அறைக்குத் தகவல் அளிக்கப்பட்டது.

விமானம், விமான நிலையத்தை வந்தடைந்ததும் சந்தேக நபர் பாதுகாப்பு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு கட்டுநாயக்க பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக இரண்டு விமானப் பணிப்பெண்களிடமிருந்தும் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

நீர்கொழும்பு சட்ட வைத்திய அதிகாரியிடம் ஆஜர்படுத்தப்பட்ட சந்தேகநபர் அதிகளவில் மது அருந்தியிருந்தது உறுதி செய்யப்பட்டது.

இந்தச் சம்பவம் இலங்கை வான்வெளியில் நடந்ததால் சந்தேக நபர் கொழும்பு இலக்கம் 01 நீதவான் நீதிமன் றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார். (ந-7)

# புதையல் தோண்டிய ஒன்பது பேர் கைது

(மகாவலி)

சூரியவெவ, மகாவலி பிரதேசத்தில் உள்ள காணியொன்றில் புதையல் தோண்டிய 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களில் கடற்படைத்தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் சிவில் பொறியியலாளர் ஒருவரும் அடங்குவதாகவும் ஏனைய சந்தேக நபர்கள் மித்தெனிய மற்றும் சூரியவெவப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனவும் இவர்கள் 35, 40 வயதுடையவர்கள் எனவும் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சந்தேக நபர்களுடன் வான், முச்சக்கரவண்டி மற்றும் புதையல் தோண்டும் உபகரணங்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிநபரின் மாதாந்த செலவு அதிகரிப்பு! புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவிப்பு

(கொழும்பு)

2025 ஜனவரி மாதத்தில் தனிநபர் மாதாந்தச் செலவு அதிகரித்துள்ளதாக தொகை மதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் ஜனவரி மாத உத்தியோகபூர்வ வறுமைக் கோட்டின் படி, செலவுகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதன்படி, 2025 ஜனவரி மாதத்தில் ஒருவருக்கு குறைந்தபட்ச அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான தொகை 16,334 ரூபா வாகும்.

இது கடந்த ஆண்டு டிசெம்பரில் 16,191 ரூபாவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

தனிநபர் செலவீனங்கள் அதிகம் உள்ள மாவட்டமாக கொழும்பு மாவட்டம் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் இதன் தொகை 17,617 ரூபா வாகும்.

தனிநபர் செலவீனத்தில் மிகக்குறைந்த மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டம் காணப்படுகின்றது.

அங்கு தனிநபர் ஒருவர் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான மாதாந்திர தொகை 15,780 ரூபாவாகும். (நி-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## கருங்குறுவை அரிசி

**Botanical name- Oryga indica**
**Family- poaceae**
**Engl- Black poddy rice**



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**சி**த்தர்கள் சாப்பிட்ட அரிசி இரத்தசோகையைப் போக்குகிறது. சாதாரண அரிசியுடன் ஒப்பிடும்போது இதில் 4 மடங்கு இரும்புச் சத்து உள்ளது. சிறந்த நச்சு நீக்கியாகும். உடலில் நச்சுக்கள் மற்றும் உடலில் தேங்கியுள்ள பிற கழிவுகளை அகற்ற உதவுகிறது. சீனா நாட்டைச் சேர்ந்தவர்கள் கவுனி அரிசி என்றழைக்கப்படும் கருங்குறுவை அரிசியிலுள்ள போசனைக்கூறுகள், மற்றும் மருத்துவகுணங்களை அறிந்தமையால் அதன் பயன்களை தாங்கள் மட்டுமே அனுபவிக்க வேண்டுமென கருதி அதனைப் பாதுகாத்து தங்களுக்கு மட்டுமே உரியதாக கருதியமையாலேயே Forbidden rice எனும் பெயரும் இதற்குண்டு.



இது ஊதா கலந்த கறுப்பு நிறத்தில் இருக்கும். அதற்கு காரணம் இதில் திகளவில் காணப்படும் அன்சோ சயனின் எனும் நிறமியாகும். இதைவிட இதில் அதிகளவு புரதச் சத்தும், இரும்புச்சத்தும் உண்டு. இதனால் இதனை Blood Tonic ஆகவும் பயன்படுத்தி உள்ளார்கள். அதிகளவு உடல்நிறை ஏற்படக் கூடாது என்று நினைப்பவர்களும், இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதற்கும் இக் கருங்குறுவை அரிசியை பயன்படுத்தலாம்.

நீங்கள் கடைகளில் இவ் அரிசியை வாங்கும்போது முழு அரிசியாகப் பார்த்து வாங்க வேண்டும். ஏனெனில் அதில் தான் தவிட்டுச் சத்து அதிகமாக காணப்படும் மற்றைய அரிசிகளைப் போலல்லாது இதைச் சமைக்க நீண்ட நேரம் எடுக்கும். இதற்கு இவ் அரிசியை இரண்டு மணிநேரம் நீரில் ஊற வைத்து அதன்பின்பு சமைக்க வேண்டும்.

சிலர் இதனை இரவு முழுவதும் நீரில் ஊறவைத்தும் காலையில் சமைப்பார்கள்.

இக் கருங்குறுவை அரிசியில் நார்ச்சத்து அதிகளவு காணப்படுகிறது. [illegible] நன்மை என்னவெனில் இவ் அரிசிச்சோறு சுலபமாக சமிபாடு அடையும். ஆனாலும் ஒட்டுத்தன்மையும் (sticky) காணப்படும். வாரத்தில் இரண்டு நாட்களாவது இவ் அரசிச்சோறு பயன்படுத்துவது ஆரோக்கியத்திற்கு சிறந்தது. இக் கருங்குறுவை அரிசிச் சோற்றை சாப்பிட்டுவரும்போது தற்காலிக ஆண்மைக் குறைவை நீக்கக்கூடியதாக இருக்கும் அதாவது நரம்புகளுக்கு இரத்த ஓட்டத்தைக் கூட்டி இச் செயற்பாட்டைச் செய்யும்.

குழந்தையின்மைக்கு சிகிச்சை எடுக்கும் ஆண்கள் இக் கருங்குறை அரிசியை சமைத்து சாப்பிட்டு வரும் போது விந்தணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும். நீரழிவு நோயாளிகள் இக் கருங்குறுவை அரிசியை சோறாகவோ அல்லது மாவாக அரைத்து இட்லி, தோசை, இடியப்பம் போன்றன தயாரித்து பயன்படுத்தும் போது நீரிழிவில் இரத்தத்தில் சீனியின் அளவை கட்டுப்பாட்டில் வைத்திருக்கக் கூடியதாக இருக்கும். அத்துடன் மலச்சிக்கல் வராமல் தடுக்கக் கூடியதாகவும் இருக்கும். [illegible] கருங்குறுவை அரிசியை பயன்படுத்திவரும் போது எமது உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

அத்துடன் இவ் அரசியில் Anti oxidant சத்துக்களும் உண்டு. புற்றுநோய்க்கலங்கள் வளராமல் தடுக்கும் ஆற்றலும் உண்டு. அத்துடன் முக்கியமாக யானைக் கால் நோய், தோலில் ஏற்படும் கரப்பான், சோறியாசிஸ், குட்டநோய்கள் வராமல் தடுக்கும் ஆற்றலும் இக் கருங்குறுவை அரிசியில் உண்டு.

யானைக்கால் நோய் உள்ளவர்கள் இக் கருங்குவை அரிசியை சமைத்து அத்துடன் பசுவின்பால், தேன் சேர்த்து கஞ்சியாக தயாரித்து காலை உணவாக சாப்பிட்டு வர யானைக் கால் நோய் குறைய வாய்ப்புண்டு. கருங்குறுவை அரிசியைப் பயன்படுத்திவரும் போது இரத்தத்திலுள்ள கெட்ட கொலஸ்ரோலின் அளவைக் குறைத்து நல்ல கொலஸ்ரோலின் அளவை சரியாகப் போணுவதனால் இருதய நோயின் தாக்கம் ஏற்படாமல் தவிர்த்துக் கொள்ளலாம்.

அத்துடன் இரத்த அழுத்தத்தை சரியாக பேணி இரத்த அழுத்தம் அதிகரிக்க விடாமலும் தடுக்கும் ஆற்றலும் உண்டு. இக் கருங்குறுவை அரசியில் உயிர்ச் சத்து B1, B2, போலிக் கமிலம், இரும்புச்சத்து, நாகச்சத்து, கல்சியம், பொஸ்பரஸ் போன்ற சத்துக்களும் சில முக்கிய அமினோ அமிலங்களும் இதில் காணப்படுகிறது. இவ் அரிசியை தொடர்ந்து சமைத்து சாப்பிட்டுவரும் போது என்புகள் பலப்படும். அத்துடன் மூட்டுக்களில் ஏற்படும் வலியையும் குறைக்கின்றது. இக் கருங்குறுவை அரிசி ஓர் பாரம்பரிய அரிசியாகும். இழந்த சக்தியை மீண்டும் கொடுக்கும் ஆற்றலுடையது. அதிகரித்த பித்ததோஷத்தை நீக்கக் கூடியது.

ஆதிகாலத்தில் மன்னர்கள் சாப்பிட்ட அரிசி. குழந்தை பெற்ற பெண்களுக்கு உடலில் சக்தி அதிகம் தேவைப்படுகிறது. தாய்ப்பால் அருந்தும் வயதில் இருக்கும் குழந்தைகளைக் கொண்ட பெண்கள் இவ் அரிசிமாவைக் கொண்டு தயாரிக்கும் உணவு வகைகளை பயன்படுத்த தாய்ப்பால் அதிகமாக சுரக்கும். சித்த மருத்துவத்தில் முதன்மையான மருந்தாக கருங்குறுவை அரிசி பயன்படுத்தப்படுகிறது.

**குட்டமுடன் மேகரணம்**
**கூறுஞ் சிலவிடங்கள்**
**விட்டகனு முண்மையது**
**வேற்கண்ணாய்- மட்டக்**
**கருங்குறுவை சுத்த**
**வண்ணங் காதலித்தே**
**யுண்ண**
**வருங்குணமே நன்றா**
**மறி.**

இச் செய்யுளிலிலே மேற்கூறிய நோய்களை நீக்கும் ஆற்றல் உண்டு என்பதை எடுத்தியம்புகிறது. இக் கருங்குறுவை அரிசிச் சோற்றை தொடர்ந்து சாப்பிட்டுவரும் போது தூக்கமின்மை, மன உளைச்சலை நீக்கும் ஆற்றலும் உண்டு. எமது பிரதேசத்தில் இவ் இன கருங்குறுவை அரிசி பயன்படக்கூடிய மண் வளம் உண்டு. ஆனாலும் மக்களின் பயன்பாட்டின்மை விழிப்புணர்வின்மை காரணமாகவே விவசாயிகள் பயிர் செய்வது மிகமிக அரிது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரணிலின் கதை...

பட்டலந்த விசாரணை அறிக்கை தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க விடுத்த அறிக்கைக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பட்டலந்த அறிக்கை தொடர்பில் நிச்சயம் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

பொதுமக்களுக்கு வாக்குறுதியளித்தபடி அரசாங்கம் அறிக்கையைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும், எதிர்வரும் ஏப்ரல் மாதம் 10ஆம் திகதியும் மே மாதமும் இந்த அறிக்கை தொடர்பில் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த விவகாரம் தொடர்பாக ஒரு குழுவை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அறிக்கையைச் சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பவுள்ளோம்.

விவாதத்தை நடத்துவதற்கு எதிராக ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி குழுவினர் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

எனினும் யார் என்ன சொன்னாலும் பாராளுமன்றத்தில் இந்த அறிக்கை தொடர்பில் இடம்பெறவுள்ள விவாதத்தில் எந்தவித மாற்றமும் இல்லை.

நாட்டில் ஜனநாயகம் மற்றும் நீதிக்காக விவாதத்தை நடத்துவதாகவும், அறிக்கையின் உண்மைத் தன்மைகள் தொடர்பில் மக்கள் அறிந்து கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்ட அமைச்சர்,

பட்டலந்தை சம்பவம் தொடர்பில் முழுவதும் அறிந்தவர் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க என்றும், அல் ஜசீராவின் சமீபத்திய நேர்காணலில் கேள்வியெழுப்பும் வரை அவர் அதைப் பற்றி ஒருபோதும் பேசவில்லை.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று இல்லை, கடந்த 35 ஆண்டுகளாக ரணில் இதைப் பற்றிப் பேசியிருக்கலாம்.

அல் ஜசீரா பேசும் வரை அவர் எதுவும் சொல்லவில்லை.

ரணில் இப்போது மிகவும் காலம் தாழ்த்திவிட்டார் என அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் குறிப்பிட்டார். (ந-7)

## 13ஆவது திருத்த...

கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவராலயத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர்,

இலங்கை விவகாரத்தில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வாக 13ஆவது திருத்தச் சட்டம் இருக்கும்.

இதற்கு இந்தியாவின் பூரண அனுசரணை என்றும் உண்டு. இந்தியா இவ்விடயத்தில் உறுதியாகவுள்ளது என்றார். (ந-7)

## வேட்புமனுக்கள்...

திங்கட்கிழமை முதல் ஏற்றுக் கொள்ளப்படவுள்ளன.

இந்நிலையில், வேட்புமனுத் தாக்கல் தொடர்பில் தேர்தல் ஆணைக்குழு விசேட அறிக்கை ஒன்றினை விடுத்துள்ளது.

இவ்வறிக்கையில் சில முக்கிய நிபந்தனைகளை கருத்தில் கொள்ளுமாறு வேட்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அவையாவன, அங்கீகரிக்கப்படாத நபரால் சமர்ப்பிக்கப்பட்டாலோ அல்லது வேட்பாளர்களின் எண்ணிக்கை தேவையான தொகையுடன் பொருந்தவில்லை என்றாலோ வேட்புமனுக்கள் தகுதி நீக்கம் செய்யப்படலாம்.

ஒரு வேட்பாளர் தனது வேட்புமனுவில் கையொப்பமிடத் தவறினால், அவர்களின் பெயர் பட்டியலிலிருந்து நீக்கப்படும், மேலும் எந்த மாற்றுப் பெயரும் அனுமதிக்கப்படமாட்டாது.

ஒரு வேட்பாளரின் வேட்புமனு நிராகரிக்கப்பட்டால், அவர் சார்பாக வைப்புச் செய்யப்பட்ட எந்தவொரு பத்திரமும் பறிமுதல் செய்யப்படும் என்பதையும் இந்த அறிவிப்பு உறுதிப்படுத்துகிறது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் இன்று முதல் மார்ச் 20ஆம் திகதி மதியம் 12 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

மாவட்டச் செயலக அலுவலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களில் தினமும் காலை 8.30 மணி முதல் மாலை 4.15 மணி வரை அவற்றைச் சமர்ப்பிக்கலாம். அங்கு தேர்தல் அதிகாரிகள் செயன்முறையை மேற்பார்வையிடுவார்கள்.

இதேவேளை மன்னார், பூநகரி மற்றும் தெஹியத்தகண்டிய பிரதேச சபைகளுக்கான வேட்புமனுக்கள் மார்ச் 24 முதல் 27 வரை ஏற்றுக்கொள்ளப்படும். கட்டுப்பணத்தைச் சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள் மார்ச் 26ஆம் திகதி நண்பகல் 12 மணி வரை என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

சுமூகமான செயன்முறையை உறுதி செய்வதற்காக, தேர்தல் ஆணைக்குழு அனைத்து மாவட்டச் செயலக அலுவலகங்கள் மற்றும் தேர்தல் அலுவலகங்களிலும் இன்று முதல் வேட்புமனுத் தாக்கல் செய்யும் காலம் முடியும் வரை மேம்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளை செயற்படுத்தும். (ந-7)

## சாதா...

அசௌகரியங்கள் காணப்பட்டால் பரீட்சார்த்திகள் 1119 என்ற பரீட்சைகள் திணைக் களத்தின் துரித இலக்கத்துக்கு அழைப்பை ஏற்படுத்தி அறியப்படுத்துமாறு மேலதிக பரீட்சைகள் ஆணையாளர் ஜீவராணி புனிதா தெரிவித்துள்ளார்.

இதேவேளை பரீட்சை நடைபெறும் போது வானிலை மாற்றங்களினால் ஏற்படக்கூடிய இடையூறுகளைத்தவிர்ப்பதற்காக அனர்த்த முகாமைத்துவ நிலையமும் பரீட்சைகள் திணைக்களமும் இணைந்து விசேட திட்டத்தினைச் செயற்படுத்தியுள்ளது.

இதன் பிரகாரம் பரீட்சார்த்திகள் யாதேனும் அனர்த்தங்களுக்கு முகம் கொடுக்க நேரின் துரித இலக்கமான 117/ 0113663020/ 0113668100/ 0113668013/ 0113668010 மற்றும் 076 3117 117 ஆகிய இலக்கங்களுக்குத் தெரியப்படுத்துவதன் ஊடாக உரிய வழிகாட்டுதல்களைப்பெற்றுக் கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-7)

## 6 மாத கர்ப்பிணிப் பெண் தீயில் எரிந்து மரணம்

(யாழ்ப்பாணம்)

தீக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த கர்ப்பிணிப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி கடந்த வெள்ளிக்கிழமை (14) உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் வசாவிளான் தெற்கைச் சேர்ந்த பிரகாஸ் பிருந்தா (வயது - 26) என்ற இரு பிள்ளைகளின் தாயாவார்.

மரண விசாரணையை யாழ். மாவட்ட திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2025.03.16
சீட்டிழுப்பு இலக்கம் 5777
N 4 9 5 6 0 6
அத சம்பத N 5 6 0 6
சீட்டிழுப்பு இலக்கம் 0352
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.03.16
சீட்டிழுப்பு இலக்கம் - 1807
E 03 15 54 58 E
Double Chance 26884

மெகா பவர்
திகதி 16/03/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2125
G 03 12 34 44 51

ஜய JAYA NLB
திகதி 2025.03.16
சீட்டிழுப்பு இலக்கம் 045
E 6 0 3 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4019
சீட்டிழுப்பு திகதி 16.03.2025
G 08 49 72 79
G
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.03.16
சீட்டிழுப்பு இலக்கம் 1086
மீனம் 05 12 31 52 மீனம்
23378 18

உத்தியோகபூர்வ முடிவுகள்
16.03.2025 வெற்றி வாரம் 485
Q 8 9 1 0 8 8
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.33,621,962.00
96426
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2751
சீட்டிழுப்பு திகதி 2025.03.16 தினம் ஞாயிற்றுக்கிழமை
09 37 45 48 Q
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.92,572,343.20
DLB

சனிதா
திகதி 16.03.2025 வெற்றி வாரம் 4912
04 08 15 68 A
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 57,062,908.40
ரூ.100,000/- 78699
DLB

சசிரி
644
16.03.2025 ஞாயிற்றுக்கிழமை
24 27 49
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00
DLB

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4463
சீட்டிழுப்பு திகதி 16.03.2025 தினம் ஞாயிற்றுக்கிழமை
06 25 39 60 ரிஷபம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,437,370.80
108585
DLB

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
O 20 22 30 38 42
1927
16.03.2025
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.568,659,409.60
DLB

அத கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 2577
சீட்டிழுப்பு திகதி : 2025.03.16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.80,199,434.40
45 51 66 75 X
561365
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி விற்பனைக்கு

## யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் 36 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**நிலப்பரப்பு**






- ♦ பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்.
- ♦ 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- ♦ உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது.
- ♦ கட்டுக் கிணற்றுடன் சிறிய வீடும் உள்ளது.
- ♦ பயன் தரும் தென்னைகள் உள்ளன.
- ♦ நல்ல சுற்றுச் சூழல், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- ♦ நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- ♦ ஒரு பரப்பின் விலை 64 இலட்சம்.
- ♦ தரகர் தேவையில்லை.
- ♦ பார்வையிடும் நேரம் :

காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(3680)



தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389, 077 986 5457**

---

## இப்பொழுது விற்பனையில்....

### யுனிலங்காஸ் வெளியீடு

இலங்கையின் சகல பாகங்களிலும் உள்ள முன்னணி ஆசிரியர்களின் ஆக்கத்தில் தரம் 01 முதல் 05 வரையான மாணவர்களுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

இலவச இணைப்பாக சிறுவர் சஞ்சிகையுடன்



**யாழ் எக்ஸ்பிரஸ்**
YARL EXPRESS



**முதலாம் தவணை**

மாதிரி பரீட்சை வினாத்தாள்களும் விடைகளும்

**Rs. 260/-**

வெளியீடு : UNILANKA'S PUBLICATION,
No. 326, Sea Street, Colombo 11.
Tel : 011 4014438 Hotline : 077 6258778
Whatsapp : 077 6258778 / 0777220324

(C-2475)

---

## Village Hotel
### Bus Booking (A/C Bus)

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)

தொடர்புகளுக்கு :

www.villagehotel.lk

**077 544 8503**

(3456)

---

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2476)

---

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் ஆரியகுளத்திற்கு அண்மையில் சிறிய குடும்பம் வசிப்பதற்கு வீட்டின் மேற்பகுதி வாடகைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**077 225 5627**

(3677)

---

## விசாக்கான (Show money)

வங்கி இருப்பு உறுதிப்படுத்தி தரப்படும்.

குறைந்த சதவீதத்தில்%
- Visit visa
- Student visa
- Fixed & saving

சகல நாடுகளுக்குமான விசா சேவைகள்

தொடர்புகளுக்கு :

**075 033 6759**

(907)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.03.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.